Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

### யாழ். மாவட்டத்திற்கான மா, பாண் விலை நிர்ணயம்

யாழ் மாவட்டத்திலும் மா, பாணின் விலை குறைக்கப்பட்டுள்ளது. யாழ். பேக்கரி உரிமையாளர் சங்கத்திற்கு புனர்வாழ்வுப் பிரிவினரால் எதிர்வரும் 6ஆம் திகதி மா 7.00 ரூபாவிற்கு விநியோகம் செய்யப்படுவதை அடுத்து, பாணின் விலை 5-00 ரூபாவாக விற்பனைக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டது. யாழ் செயலக புனர்வாழ்வு காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. 350கிராம் பாண் 5.00 ரூபாவிற்கு விற்பனை செய் (6ஆம் பக்கம் பார்க்க)

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆவணி 18 | 03·09·94 | சனிக்கிழமை | ஓசை 197

# நல்லெண்ண சமிக்கையாக 10 பொலிசார்
# தலைவர் பிரபாகரனால் நேற்று விடுதலை!

## யுத்த நிறுத்தத்திற்கும் பேச்சுவார்த்தைக்கும் விடுதலைப் புலிகள் தயார் எனவும் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தின் சமரச முயற்சிகளுக்கு பதில் நல்லெண்ண நடவடிக்கையாக விடுதலைப் புலிகள் இயக்கம் தம்வசம் காவலிலிருந்த போர்க் கைதிகளான பத்துப் பொலிசாரை விடுதலை செய்துள்ளது. இதுகுறித்து தலைவர் பிரபாகரன் விடுத்துள்ள ஓர் அறிக்கையில், போர் நிறுத்தத்திற்கும், நிபந்தனையற்ற பேச்சிற்கும் விடுதலைப் புலிகள் இயக்கம் தயார் என மீண்டும் வலியுறுத்தி உள்ளார்.


பத்துப் போர்க் கைதிகள் விடுதலை தொடர்பாக தலைவர் பிரபாகரன் விடுத்த அறிக்கையை இங்கே முழுமையாகத் தருகின்றோம்.

முன்னைய அரசினால் எமது மக்கள்மீது திணிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை திருமதி சந்திரிகா குமாரணதுங்காவின் புதிய அரசாங்கம் தளர்த்தியிருக்கிறது. இதனை நாம் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். சமாதானமும் நல்லெண்ணமும் நிலவும் சமரச சூழ்நிலையை உருவாக்குவதற்கான ஒரு ஆக்கபூர்வமான நடவடிக்கையாக நாம் இதனைக் கருதுகிறோம்.

அரசாங்கத்தின் இந்த சமரச முயற்சிக்கு எமது பதில் நல்லெண்ண நடவடிக்கையாக எம்வசம் காவலிலுள்ள பத்துப் போர்க்கைதிகளை விடுதலை செய்ய நாம் முடிவெடுத்திருக்கிறோம் சிறிலங்கா காவல்துறையைச் சேர்ந்த பத்துக் கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்படுவர். நல்லுறவையும் புரிந்துணர்வையும் தோற்றுவிக்கும் ஒரு நல்லெண்ண சமிக்கையாகவே எமது இந்த நடவடிக்கை அமையப்பெறுகிறது.

முன்னைய அரசு, எமது மக்கள்மீது திணித்த இந்தப் பொருளாதாரத் தடையானது மனிதாபிமானமற்ற ஒரு அநீதியான செயல் என்பதை நாம் இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இந்தச் செயலால், கடந்த நான்கு ஆண்டுகளாக எமது மக்கள் நாளாந்த சீவியத்திற்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியாது பாரிய துன்பத்திற்கு ஆளாகினர்.

(5ஆம் பக்கம் பார்க்க)



## இளைஞர் சுட்டுக் கொலை

[கொழும்பு]

வவுனியா வைரவப்புளியங்குளத்தில் கடந்த செவ்வாய் இரவு தமிழ் இளைஞன் ஒருவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்

படையினரிடம் தொடர்பு கொண்டவரென கருதப்படும் தணிகாசலம் சிறீதரன் [இந்திரன் வயது 28] என்பவரே சுட்டுக்கொல்லப் பட்டவராவார். படையினருக்கு தகவல்களை அளிப்பவர் இவரெனவும் வவுனியாப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## பொருளாதாரத்தடையை முற்றாக நீக்கின் ஏனைய பொலிசாரும் விடுதலையாவர்

சிறிலங்காவின் புதிய அரசானது பொருளாதாரத் தடையை முற்றாக நீக்குமேயானால் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள ஏனைய பொலிசாரும் விடுவிக்கப்படுவர் என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு அன்ரன் பாலசிங்கம் குறித்து நமது பத்திரிகையாளர் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்விடுதலை குறித்து அவர் வழங்கிய பேட்டி வருமாறு;

கேள்வி:

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம்

## நேற்று விடுவிக்கப்பட்ட சிங்கள பொலிசார் விபரம்

# விடுவிக்கப்பட்டோர் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள சிறிலங்கா யுத்தக் கைதிகளில் பத்துப் பேர் நேற்று நல்லெண்ண அடிப்படையில் விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்டனர்.

நேற்று மாலை 5 மணியளவில் யாழ்நகரில் வைத்து இப்பத்து பொலிஸ் யுத்தக் கைதிகளும் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு தமிழ்ச்செல்வன் அவர்களால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதி செல்வி மேரிபேகின்ஸ் அவர்களிடம் கையளிக்கப்பட்டனர்.

இதன் போது யுத்தக் கைதிகள் விடுவிக்கப்பட்டது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் அறிக்கையொன்றை வெளியிட்டார். இவ் அறிக்கையினை ஆங்கிலத்தில் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கமும் தமிழில் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வனும் வெளியிட்டனர். இந் நிகழ்வில் விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல் ஆலோசகர்

(6 ம் பக்கம் பார்க்க

## விசேட விமானம் மூலம் இன்று கொழும்பு செல்வர்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளால் நல்லெண்ண அடிப்படையில் நேற்று விடுவிக்கப்பட்ட பத்து சிறிலங்காவின் பொலிஸ் யுத்தக் கைதிகளும் இன்று காலை விசேட விமானம் மூலம் கொழும்பு செல்கின்றனர்.

நேற்று மாலை யாழ். நகரில் வைத்து தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வனிடம் இருந்து இப்பத்து யுத்தக் கைதிகளையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிட பிரதிநிதி பொறுப்பேற்றுக் கொண்டார். விடுவிக்கப்பட்ட இவ் யுத்தக்

(5ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள பொலிசார் விபரம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளால் யுத்தக் கைதிகளாக பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த பத்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர். அவர்களின் விபரம் வருமாறு:

★ டபிள்யூ எம் லிண்டன் தர்மபாலா (வயது39), கம்பாந்தோட்ட,
★ டபிள்யூ எம். கருணாநாயக்கா (வயது 39) குருணாகலை,
★ ஆர். எச். லால்நயகனநந்தா (வயது38) மீரிகம,
★ கே. பி. ஜெயதிலகா (வயது 36) அனுராதபுர

(5ஆம் பக்கம் பார்க்க)

கர் திரு அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

நேற்று மாலை விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த சிறிலங்கா பொலிஸ் யுத்தக்கைதிகளில் பத்துப்பேர்விடுவிக்கப்பட்டது

கேள்வி: என்ன அடிப்படையில் இந்த பத்துப் பேரையும் தெரிவுசெய்தீர்கள்?

பதில்: எமது பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள யுத்த பொலிஸ் கைதிகளில்

(5ஆம் பக்கம் பார்க்க )

## இன்று படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச்சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர்.

# கைதிகளாகவுள்ள புலிகள் குறித்து என்னால் எதுவும் கூறமுடியாது

## பிரிகேடியர் கெமுனு குலதுங்க தெரிவிப்பு

(லண்டன்)

அரசாங்கத்தினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகளின் விடுதலை குறித்து தம்மால் எதுவும் கூற முடியாது எனவும் அது உயர்நிலைத் தீர்மானத்தினைப் பொறுத்தது எனவும் பிரிகேடியர் கெமுனுகுலதுங்க நேற்று பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.


அப்பேட்டியின் விபரம் வருமாறு:

கேள்வி- எத்தனை படையினர் புலிகளிடம் இருக்கிறார்கள்?

பதில்- இப்போதைக்கு சொல்லமுடியவில்லை. தெளிவாக ஆராய்ந்தபின்பே சொல்லமுடியும்.


கேள்வி- மேலும் படைவீரர்களை புலிகள் விடுவிப்பார்கள் என எதிர்பார்க்கிறீர்

(5ஆம் பக்கம் பார்க்க)



பத்து பொலிஸ் உத்தியோகத்தர்களை விடுவிப்பதற்கான பத்திரத்தில் அரசியற் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் கையொப்பமிடுவதனையும் அருகே அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க யாழ் வதிவிடப் பிரதிநிதி மேரிபேர்கின்ஸும் அமர்ந்திருப்பதனையும் படத்தில் காணலாம்.

விடுதலைப் புலிகளால் யுத்தக் கைதிகளாக தடுத்துவைக்கப்பட்டிருந்து நேற்று விடுவிக்கப்பட்ட பொலிஸ்உத்தியோகத்தர்களுக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் கைலாகு கொடுப்பதனை படத்தில் காணலாம்.



## வரி விளம்பரம்

### வெளிவந்துவிட்டது வியாழன் மாற்றம்

Prof. T. சத்தியதாஸன் கணிப்பில், ஏக விநியோகஸ்தர்கள் ஸ்ரீ காந் புத்தகசாலை நல்லூர். மக்மிலன் புத்தகசாலை யாழ்ப்பாணம். இந்தியா ருடே 1994 ஆண்டு மலர் வெளிவந்து விட்டது. சிவம் நீதிக்கதைகள் 3,4,5,6 ஆண்டு 5 கணிதம் தமிழ் 94 வினா விடைகள் (சி-10101)

### நீங்கள் சுவைக்கவில்லையா?

மணலாறு கச்சான் அல்வா. சுத்தமானது, சுவையானது. அனைவரும் விரும்பிச் சுவைப்பது. உற்பத்தியாளர் பாரதி சிறுகைத்தொழில் நிறுவனம் சம்பியன்லேன் கொக்குவில் எல்லா இனிப்புவியாபாரிகளிடமும்பெற்றுக்கொள்ளலாம். (9264)

### அநுமதிப் பரீட்சை

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு -6 மாதிரி அநுமதிப் பரீட்சை வினாத்தாள் 03. 09. 94, சனி. வெளியிடப்படும் தேவையானோர் தொடர்புகொள்ளவும் மாதிரி வகுப்புகளும் ஆரம்பமாயுள்ளன. புதிய கல்வி நிலையம் 219. நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (9266)

### தேவை

யாழ்ப்பாணம் வர்த்தக நிறுவனமொன்றில் வேலை செய்யும் இருவருக்கு தங்குமிடம் தேவை. (ROOM) இடவசதியுள்ளவர்கள் கீழ் காணும் முகவரிக்கு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விள. இல. 349 மே/பா. ஈழநாதம், யாழ்ப்பாணம் (9268)

### விற்பனைக்கு

சாவகச்சேரி தபால் கந்தோர் வீதி முதலாம் ஒழுங்கையில் 2½ பரப்பு வீட்டுக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு விஷ்ணு முகவர் (பழைய நீதி மன்றுமுன்னால்) கண்டி வீதி, சாவகச்சேரி. (9270)

---

தனியார் கல்விநிறுவன ஒன்றியம்

பண்டத்தரிப்பு கோட்டம்

## பொதுச்சபைக் கூட்டம்

இடம் ;- சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை

காலம் ;- 5 - 9 - 94 (திங்கள்) பி. ப 3. 30 மணி

விடயம் ;- புதிய நிர்வாக சபை தெரிவும், புதிய நடைமுறை விளக்கங்களும்.

மாவட்ட ஒன்றிய நிர்வாகத்தினரும் தனியார் கல்வி நிர்வாகப் பிரிவினரும் கலந்து கொள்ளவிருப்பதால் கூட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து அனைத்து உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளவும்.

குறிப்பு :- அன்றைய தினம் பண்டத்தரிப்பு கோட்டத்தில் மாலை நேரம் சகல நிறுவனங்களுக்கும் விஷேட விடுமுறை தினமாகும்

பொதுச் செயலாளர்
யாழ் மாவட்டம்.

(சி-10234)

---

தவறாது நல்லூருக்கு வாருங்கள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன

கண்காட்சியைப் பாருங்கள்

## பரிசுப்போட்டி ஒன்று காத்திருக்கிறது!

உங்களுக்கு பெறுமதி மிக்க பரிசுகள் கிடைக்கும்!

போட்டி விபரங்கள் கண்காட்சி வாசலில்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

(சி-10225)

---

45-ம் நாள் நினைவஞ்சலியும்

---

Computer Programming
IN
BASIC LANGUAGE
**4 MONTHS**

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

WEEKEND BATCH - 03-09-94
மணி - 10.30

WEEKDAY BATCH - 06-09-94
மணி - 10.30

கட்டணம் - மாதம் 400/-

உறுதியான கல்வியைப் பெற

SCHOOL OF BUSINESS ADMINISTRATION

16, 3RD CROSS STREET
JAFFNA

(சி/10232)

---

## விற்பனைக்கு

கடற்புலிகளின் வெளியீடான

**கடலிலே காவியம் படைப்போம்**

ஒலிப்பதிவுநாடா மொத்தமாகவும் சில்லறையாகவும், எம்மிடம் விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு:-

மின்வளம்

இல. 81, சந்தோசம் தெரு, யாழ்ப்பாணம்.

(சி10229)

---

தமிழீழ மாவட்ட நீதிமன்று கிளிநொச்சி

## இடைக்காலத் தீர்வை

வழ. இல: 01/94
தன்மை: பணம்

வழக்காளி:
யக்கோபிள்ளை கவுரியல்பிள்ளை
தொடுவாய் வாய்க்கால்,
கண்டாவளை,
கிளிநொச்சி.

எதிர்

எதிராளி:
இராசையா தவராசாசெட்டி,
மணியகாரன் சந்தி,
தும்பளை, பருத்தித்துறை.

1994ஆம் ஆண்டு வைகாசி மாதம் 11-ம் திகதி.

மேற்படி வழக்கு 1994ஆம் ஆண்டு வைகாசி மாதம் 11-ம் திகதி தமிழீழ மாவட்ட நீதியாளர் திரு. கோ. ஜனகன் அவர்கள் முன்னிலையில் வழக்காளியும், வழக்காளியின் சட்டவாளர் செல்விகு. சந்

---

## நினைவு கூருகின்றோம்...

### 03. 09. 1994 ..

1986 -ம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - புதூர், திமிலதீவில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

**டயஸ்** (கிங்ஸ்லி பேசு ராஜ்குமார் - வலையிறவு -மட்டு)

**வில்லியம் / நிராஜ்** (அ சாத்வீகன் - புன்னைச் சோலை - மட்டு)

**நிசன்** ( - ஜெகதீஸ்வரன் - புதூர் - மட்டு)

தமிழீழக் கடற்பரப்பில் (யாழ் மாதகலுக்கு வடக்கே) சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப். சுதர்சன்** (வைத்திலிங்கம் ஜீவானந்தன் -புன்னாலைக்கட்டுவன் தெற்கு - யாழ்)

**குயிலன்** (இராசரத்தினம் ரவீந்திரன் - நாவலடி, அல்வாய் - பருத்தித்துறை)

1988 -ம் ஆண்டு கிளி - வட்டக்கச்சிப் பகுதியில் இந்தியப்படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப். சீலன்** (கணேசபிள்ளை நாகேந்திரன் - ஓட்டுமடம் - யாழ்)

1989 -ம் ஆண்டு யாழ்- அளவெட்டிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**வித்தியா** (விநாயகமூர்த்தி வித்தியாதரன் - தாசுவன் தோட்டம், அளவெட்டி - யாழ்)

1990 -ம் ஆண்டு யாழ் - கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர்மேற்கொண்ட எறிகணை தாக்குதலின் போது விழுப்புண்ணடைந்திருந்து வீரச்சாவெய்திய,

**2ம் லெப். பெனா** (கிறிஸ்தோப்பர் கிளீற்றன் நிர்மலன் - இல, 31-மன்னார்)

இதே பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**பபு** (ஐயம்பெருமாள் ஜெயக்குமார் - ஊறணி, காங்கேசன்துறை - யாழ்)

1991 -ம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**ஜேம்ஸ்** ( - - மட்டுநகர்)

**ஜமால்** (பவித்துரை பாலசிங்கம் - பன்குடாவெளி - மட்டு)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் தேசவிரோதசக்திகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப். லக்ஸ்மன்** (தியாகராசா வரதராஜன் - ஆரையம்பதி -01 - மட்டு)

1992 ஆண்டு கைதடி வடக்கு தவரத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப்பிரிந்த,

**2ம்- லெப். விழி** (விமலேஸ்வரி சங்கரப்பிள்ளை- ஏழாலைமேற்கு - யாழ்)

இதே தினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும், இந்தியப்படையினராலும், தேசவிரோதசக்திகளினாலும் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமக்கள்.

கண்டி வீதி, சாவகச்சேரி. (9270)

## புரோயிலர்குஞ்சுகள் விற்பனை

PRIMA பிறிமா ஒரு நாள் புரோயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு ''மல்லிகாபதி'' சந்தை கிழக்குஒழுங்கை, மானிப்பாய் (9271)

## விற்பனைக்குண்டு

சரசாலை வடக்கு சாவகச்சேரியில் 6 பரப்புக் காணி நல்ல தண்ணீர் கிணறு உட்பட விற்பனைக்குண்டு தொடர்பு:- கனகசபை மகேந்திரன், கறுப்பர் கோவிலடி சரசாலை வடக்கு சாவகச்சேரி (9273)

## SPOKEN ENGLISH

**SPOKEN ENGLISH WITH GRAMMAR** சிறந்த முறையில் கற்பித்தல் நடைபெறுகிறது புதியவர்கள் சேர்ந்துகொள்ளலாம். **V.N. KANDASAMY, A I.B PART 1 (LONDON) INTER (LONDON) Dip - IN - ENGLISH** - இலக்கம், 87. திருநெல்வேலி றோட் (றயில் கடவைக்குச் சமீபமாக) கொக்குவில் (9272)

## "மாறாத மனங்கள்"

தொல்புரம் கிழக்கு விக்னேஸ்வரா சனசமூக நிலைய வாசகர் வட்டத்தினரால் 28. 08. 94 அன்று வெளியிடப்பட்ட திரு தி. உதயசூரியனின் ''மாறாத மனங்கள்'' என்ற சிறுகதைத் தொகுதியினை யாழ். மாவட்டத்திலுள்ள சகல புத்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். (9275)

## 45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிருத்தியமும் நன்றிநவிலலும்



தோற்றம்
01 - 07 - 1936

மறைவு
21 - 07 - 1994

### தப்பு துரைராஜா

அன்பைச் சொரிந்து பண்பாக வளர்த்திட்டு
நேசமுடன் ஒரு வார்த்தை கூறாது
மின்னலென விண்நாடி மறைந்ததேனோ - ஐயா
கண்ணுக்குள்ளிருக்கும் கருணை வடிவம் இன்னும்
கடுகளவும் குறையவில்லை நெஞ்சினிலே
நடமாடும் வீட்டிலின்று படமாகி விட்டீர்களே
அன்பு வார்த்தை கூறமாட்டீர்களா - ஐயா
நெஞ்சோடு வளர்த்த பிள்ளைகளும்
பேரப்பிள்ளைகளும், மனைவியும்
கலங்கித் தவிக்கின்றனர்
பித்தர்களாய் அனுதினமும் பிதற்றித் திரிகின்றோம்
சித்தம் தடுமாறு முன்னே சிறகடித்து வந்திடுங்கள்-ஐயா

எமது தெய்வத்தின் மரணச் சடங்குகளில் பங்கு கொண்ட அனைவரும் நாச்சிமார் கோவில், கேசாவில் பிள்ளையர் வீதியிலுள்ள எமது இல்லத்தில் இடம் பெறும் அந்தியேட்டி கிரிகையிலும் விருந்துபசாரத்திலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

18, கேசாவில் வீதி,
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

(9265)

மேற்படி வழக்கு 1994ஆம் ஆண்டு வைகாசி மாதம் 11-ம் திகதி தமிழீழ மாவட்ட நீதியாளர் திரு. கோ. ஜனகன் அவர்கள் முன்னிலையில் வழக்காளியும், வழக்காளியின் சட்டவாளர் செல்வி. சந்தனா சமுகத்தில் கீழ்க்கண்டவாறு இடைக்காலத் தீர்ப்பு வழங்கப்படுகிறது.

1994ஆம் ஆண்டு பங்குனி மாதம் 6 ம் திகதி எதிராளிக்கு அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்கப்பட்டும் எதிராளி மன்றில் சமுகம் அளிக்காதமையினால் ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு வழக்காளி சாட்சிகளின் சான்றுரைகளின் பிரகாரம் 1990ஆம் ஆண்டு வழக்காளியிடம் இருந்து எதிராளி கருவாடு வாங்கிய பணமான ரூபா 40,500/-ஐயும் வழக்குத் தீர்வைத் திகதி வரை வட்டியாக ரூபா 20,244/-ஐயும் எதிராளி வழக்காளிக்கு செலுத்த வேண்டும் என்றும் வழக்குக்கான நீதிமன்றச் செலவும் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்படுகிறது.

இதன்படி இத்தீர்வை தொடர்பாக எதிராளியோ, எதிராளி சார்பில் அக்கறை உடைய எவரும் இன்றிலிருந்து 21 நாட்களுக்குள் இம்மன்றில் தோன்றி ஆட்சேபனை எதனையும் தெரிவிக்காவிடின் இத்தீர்வை முற்றுமுழுதாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பதிவாளர்

வழக்காளி சட்டவாளர். (9258)

## தியாகி திலீபன்

### 7 ஆம் ஆண்டு நினைவு தின

கோட்ட மாவட்ட ரீதியான

### கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டிகள்

தமிழீழ மாணவர்களே!
விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு
மகளிர் பிரிவினர்
அளிக்கும் இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
உங்கள் படைப்பாற்றலைக் காட்டிப் பெறுமதிமிக்க
பரிசுகளையும் சான்றிதழ்களையும் பெற்றுமகிழுங்கள்

போட்டி விதிமுறைகள்: 22-08-94 ஈழநாதம் பார்க்கவும்

போட்டி முடிவுத் திகதி 10-09-94

விடுதலைப் புலிகள்
மாணவர் அமைப்பு (மகளிர்)

(சி-10169)

களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும், இந்தியப்படையினராலும், தேசவிரோதசக்திகளினாலும் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10231)

## 8-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
4 07-1964

வீரச்சாவு
3-09 1986



### வீரவேங்கை குயிலன்

(இராசரத்தினம் ரவீந்திரன்)
திதி- 5-9 94

வாட்டும் சோகத்தால் வாடுகின்றோம் நாளும்
எட்டு ஆண்டு அதற்குள் ஓடிப்போயிற்றா?
தொட்டுத் தொடர்கிறோம் உன் பணியை
எட்டிவிட விடுதலையை நாமும்.

- குடும்பத்தினர்

நாவலடி,
அல்வாய், பருத்தித்துறை.

(சி-10223)

பொதுசன நூலகம்

# மோட்டார் ஊர்தி உரிமையாளர்கள் ஊர்திகளை

## பதிவு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை

**1. பதிவு மேற்கொள்ளல்**

1 அ. மூலஆவணம் இருப்பின்

பதிவு செய்ய வேண்டிய ஊர்தியின் மூல ஆவணத்தில் பதிவுக்கு வந்தவரின் பெயர் இருப்பின், முதலாம் படிவத்தில் ஊர்தி வகைகளுக்கு ஏற்ப பதிந்து பதிவுக்கட்டணம் அறவிடப்பட்டு தமிழீழ பதிவுச் சான்றிதழ் வழங்கப்படும்

1. ஆ. மூல ஆவணம் இல்லாவிடின்

பதிவு செய்ய வேண்டிய ஊர்தியின் மூலஆவணத்தில் பதிவுக்கு வந்தவரின் பெயர் இல்லாவிடின் தமிழீழத்தில் பதிவு செய்த ஒரு ஊர்தியின் உரிமையாளர் பிணையாளியாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு:-

ஒரு ஊர்திக்கு ஒரு தடவை மட்டுமே தமிழீழ அடையாள இலக்கத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அவ்வூர்திக்கு மீண்டும் ஒரு தடவை தமிழீழ அடையாள இலக்கத்தைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பித்தல் தண்டனைக்குரிய குற்றமாகும்.

1. இ. வடபகுதிக்குள் முதன் முதலாக 19-01-1994 பின் கொண்டு வரப்பட்ட ஊர்தியை பதிவு செய்ய வேண்டுமாயின் உள்நுழையும் சோதனை நிலையத்தினால் பரிசோதனை செய்யப்பட்டு வழங்கப்பட்ட விபரச் சான்றிதழையும் ஏனைய ஆவணங்களையும் சமர்ப்பித்து பதிவுசெய்து கொள்ளலாம்.

1. ஈ. வடபகுதிக்கு வெளியே இருந்து எமது கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் விற்பனை நோக்கத்திற்காக கொண்டு வந்தவர்களிடம் கொள்வனவு செய்யப்பட்ட ஊர்தியாயின் உள்நுழைந்த சோதனை நிலையத்தால் வழங்கிய சான்றிதழுடன் எந்த விற்பனையாளரிடம் கொள்வனவு செய்த ஊர்தி என்று உறுதிப்படுத்தும் பற்றுச்சீட்டும் இணைத்து ஊர்தியை பதிவு செய்து கொள்ளலாம்.

1. உ. ஊர்தி உரிமையாளர்கள் தமது குடும்ப அட்டையுடன் சமுகம் கொடுத்தல் வேண்டும். அக்குடும்ப அட்டையில் பதிவுக்குட்படுத்துபவரின் பெயர் பதியப்பட்டு இருத்தல் வேண்டும். இவை யாவும் சரியாக இருக்கும்பட்சத்தில் அதற்குரிய படிவத்தை பூரணப்படுத்தி தமது கையொப்பத்தையும் இட்டு அவ்வூர்திக்குரிய ஏனைய ஆவணங்களையும் சமர்ப்பித்து அவ்ஊர்தியை தமது பெயரில் பதிவு செய்து கொள்ளலாம். பதிவு செய்யப்படும் ஊர்தியை ஊர்திப் பரிசோதகரின் பரிசோதனைக்கு உட்படுத்தல் வேண்டும்-

1. ஊ. நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்ய வேண்டுமாயின் நிறுவனத்தின் உயர் நிர்வாகிகள் இருவர் அதற்கான விண்ணப்பத்தில் தமது பதவி முத்திரை பதித்து கையொப்பம் இடவேண்டும்-

**2. ஆண்டு வரி**

வீதிகளில் பாவிக்கப்படும் எந்த ஒரு மோட்டார் ஊர்தியும் அவ்வாண்டுக்குரிய வரி அட்டைவைத்திருத்தல் வேண்டும்- வீதிப்பரிசோதனையின் போது வரியட்டை பரிசோதகரின் பார்வைக்கு காண்பிக்கப்பட வேண்டும்- ஊர்திகளில் முன்னும்பின்னும் அடையாள இலக்கங்கள் பொதுமக்களின் பார்வைக்கு தெளிவாகத் தெரியக் கூடியதாக குறிக்கப்பட்ட அளவில் மஞ்சள் நிறப்பின்னணியில் கறுப்பு நிறத்தால் எழுதிப் பொறித்திருத்தல் வேண்டும். முன்னர் அறிவிக்கப்பட்ட அளவுத்திட்டத்திற்கு அமைவாக எழுத்துக்கள் அமைதல் வேண்டும் (முறிவு எழுத்துக்கள் தவிர்க்கப்படல் வேண்டும்)

**3. உரிமை மாற்றம்**

அ) ஒரு ஊர்தியை உரிமை மாற்றம் செய்வதாயின் அந்தஊர்தியின்உரிமையாளர் மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்திற்கு சமுகம் தந்து 8-ம் படிவத்தைப் பூரணப்படுத்தி அத்துடன் பதிவுச்சான்றிதழையும், வரிஅட்டையையும் கையளித்தல் வேண்டும் அத்துடன் புதிய உரிமையாளர் 9ஆம் படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி உரிமை மாற்றத்திற்கான கட்டணத்தையும், அவ்வாண்டுக்கான வரிக் கட்டணத்தையும் செலுத்தி ஊர்தியை பரிசோதனைக்குட்படுத்திய பின் புதிய உரிமையாளர் பதிவுச்சான்றிதழையும், வரிஅட்டையையும் பெற்றுக் கொள்ளலாம். (பழைய உரிமையாளரும், புதிய உரிமையாளரும் தமது குடும்ப அட்டைகளைச் சமர்ப்பித்து தங்களை உறுதிப்படுத்தல் வேண்டும்)

ஆ) உரிமையாளர் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் வடபகுதிக்கு வெளியே சென்றிருந்தால் அக்குடும்பத்தில் உள்ள முதன்மை அங்கத்தவர் ஒருவர் உரிமை மாற்றம் செய்து கொள்ளலாம்.

இ) உரிமையாளர் இறந்திருந்தால் அவரது குடும்பத்தில் உள்ள முதன்மை அங்கத்தவர் ஒருவர் இறந்தவரின் மரணச்சான்றிதழ் மூலபிரதி/ அதன் போட்டோப் பிரதியுடனும் (போட்டோப்பிரதி திருப்பித் தரப்படமாட்டாது) குடும்ப அட்டையையும் சமர்ப்பித்து உரிமை மாற்றம் செய்து கொள்ளலாம்.

ஈ) பதிவுக்கு உட்படுத்திய ஊர்தியை உரிமைமாற்றம் செய்யாமல் விற்பனை செய்துவிட்டு 01-08-94க்கு முன் வடபகுதிக்கு வெளியே உரிமையாளர்கள் சென்றிருப்பின் புதிய உரிமையாளர் அதற்கென ஒரு பிணையை வைப்பதன் மூலமே உரிமை மாற்றம் செய்து கொடுக்கப்படும்.

**4. பிணை நிற்பவர்களின் தகைமைகள்**

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குகளிற்கு அமையவே ஒருவர் பிணைநிற்க முடியும்.

★ மோட்டார் லொறி உரிமையாளர் ஏனைய சகல ஊர்திகளுக்கும் பிணையாளியாக நிற்க முடியும்

★ பொதுமக்கள் பிரயாண ஊர்தி உரிமையாளர்கள் லொறி தவிர்ந்த ஏனைய ஊர்திகளுக்கு பிணை நிற்க முடியும்.

★ உழவு இயந்திர உரிமையாளர்கள் லொறி, பொதுமக்கள் பிரயாண ஊர்தி தவிர்ந்த ஏனையவற்றிற்கும் பிணை நிற்க முடியும்.

★ கார் ஊர்தி உரிமையாளர்கள் லொறி, பொதுமக்கள் பிரயாண ஊர்தி, உழவு இயந்திரம் தவிர்ந்த ஏனைய ஊர்திகளின் பதிவிற்கும் பிணை நிற்க முடியும்.

★ ரக்டர் பெட்டி உரிமையாளர்கள் ரக்டர் பெட்டிக்கான பதிவிற்கே பிணை நிற்க முடியும்.

★ லான்மாஸ்ரர் உரிமையாளர்கள் லான்மாஸ்ரரிற்கான பதிவிற்கே பிணை நிற்க முடியும்

★ லான்மாஸ்ரர் பெட்டி உரிமையாளர்கள் லான்மாஸ்ரர் பெட்டிக்கான பதிவிற்கே பிணை நிற்க முடியும்.

★ மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் மோட்டார் சைக்கிளிற்கான பதிவிற்கே பிணை நிற்க முடியும்.

★ ஆட்டோ உரிமையாளர்கள் ஆட்டோவிற்கான பதிவிற்கே பிணை நிற்கலாம்.

★ ஓர் ஊர்தி ஒருமுறை மட்டுமே பிணை நிற்கமுடியும்.

5. பதிவுச் சான்றிதழையோ வரி அட்டையையோ தவறவிடப்பட்டிருந்தால் அதுபற்றி காவல்துறைச் செயலகத்தில் முறைப்பாடு செய்து முறைப்பாடு செய்தமைக்கான சான்றிதழுடன் மோட்டார் ஊர்திப்பதிவுச் செயலகம் வந்து நகல்களுக்கான படிவங்களான 4ம், 7ம் படிவங்களைப் பெற்று அதற்குரிய கட்டணங்களைச் செலுத்தி நகல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

6. ஊர்திகளின் உபயோகப்படுத்தக்கூடிய அடிச்சட்டம், இயந்திரம் என்பன வெவ்வேறாக இருப்பின் அவை யாவும் மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் 5ம் படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி அதற்கான பதிவுக்கட்டணங்களைச் செலுத்தி பதிவு செய்திருத்தல் வேண்டும்.

7. பதிவு செய்யப்பட்ட ஊர்திகளின் இயந்திர மாற்றம், அடிச்சட்ட மாற்றம் செய்ய முன்னர் மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் முன் அனுமதிபெற்றுக் கொண்ட பின்னரே மாற்றம் செய்ய வேண்டும். அனுமதி பெற்று மாற்றப்பட்ட பின் மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் ஊர்தியினை மீள் பரிசோதனைக்குட்படுத்தல் வேண்டும் அத்துடன் முன் அனுமதி பெறும் பொழுது எந்த இடத்தில் எவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட அடிச்சட்டம், இயந்திரம் என்ற விபரம் சமர்ப்பிக்க வேண்டும். இயந்திரம், அடிச்சட்டம் வெவ்வேறாக முன்னரே பதிவு செய்யப்பட்டிருப்பின் மோட்டார் ஊர்திப் பதிவுச்செயலகத்தால் வழங்கிய சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

8. ஊர்திகளுக்கு நிறமாற்றம் செய்யும்போது தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்திற்கு அறிவிக்க வேண்டும்.

9. பதிவுச் சான்றிதழில் திருத்தங்கள் செய்ய வேண்டுமாயின் செயலகத்தில் குடும்ப அட்டையுடன் உரிமையாளர் வந்து திருத்தங்கள் செய்யலாம்

10 மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஊர்திகளையோ அல்லது அடிச்சட்டம், இயந்திரம் என்பவற்றையோ முற்றாக அழிப்பதாயின் அவற்றிற்குரிய பதிவுகளை மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகக்தில் இரத்துச் செய்த பின்னர், மோட்டார் ஊர்திப் பரிசோதகரின் முன்னிலையில் அழிக்கப்படல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்களுக்கமைய ஊர்தி உரிமையாளர்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்துடன் வார நாட்களில் காலை 8 30 தொடக்கம் பி.ப 12.30 மணிவரையும், பி.ப1.30 தொடக்கம் பி.ப 3.30 மணிவரையும், சனிக்கிழமைகளில் காலை 8.30 தொடக்கம் பி.ப 1.00 மணிவரையும் தொடர்பு கொள்ளலாம் என போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் மோட்டார் ஊர்தி உரிமையாளர்களின் கவனத்திற்கு அறியத் தருகின்றனர்.


4-ம் ஆண்டு
நீங்கா நினைவலைகள்



திரு. குமாரசாமி இராஜேஸ்வரன்

மண்ணில்: 23 - 08 - 1963
விண்ணில்: 16 - 09 - 1990

திதி: 03 - 09 - 1994

தத்தித் தவழ்ந்து நடந்தது நேற்றுப்போலிருக்கிறது
கத்தும் கடல் தாண்டித் தொலைதூரம் போனீரே
சித்தம் கலங்க சென்றாயே நம்மைவிட்டு
அத்தன் அடியிணையில் அமர்க நம் இராசு
எமது அஞ்சலிகள்

முருகமூர்த்தி லேன், நெல்லியடி, கரவெட்டி.
தாய், சகோதரர்கள், உற்றார், உறவினர்.

(5896)

31-ம்நாள் நினைவஞ்சலி



## தேசிய அரசாங்கம் அமைக்க பூமி புத்திர கட்சி கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும், இணைந்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டுமென சிங்கள பூமி புத்திர கட்சி ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிற்கும், புதிய பிரதமருக்கும், மற்றும் முக்கிய அரசியல் கட்சித் தலைவர்களுக்கும், மகாசங்கத்தினருக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது. அக்கட்சி மேலும் குறிப்பிடுகையில்.

மக்கள், ஐ தே க என்றும் பொ ஐ மு என்றும் பிரிந்து இருக்கக் கூடாது. பிளவுபட்டிருக்கக் கூடாது ஜனாதிபதி அனைவரையும் ஒருங்கிணைப்பவராக இருக்க வேண்டும். தேசிய அரசாங்கம் ஒன்றை நிறுவுவது இன்றைய கால கட்டத்தில் அவசியமாகும். இதனை ஏனைய கட்சித் தலைவர்களுக்கும் வலியுறுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது,

## தொண்டா கட்சி மாறினால் பதவி இழக்க நேரிடும்

### ஐ. தே. க. செயலாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

இ. தொ. கா. தலைவர்என்ற ரீதியில் தொண்டமான் எந்த அரசையும் ஆதரிக்கலாம் ஆனால் தொண்டமான் கட்சி மாறினால் பாராளுமன்ற விதிமுறைகளின்படி எம். பி. பதவியை இழக்க நேரிடும் காரணம் அவர் ஐ தே க தேசியப்பட்டியல் மூலமே தெரிவாகியுள்ளார் என ஐ. தே. க. பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இந்நாட்டு மக்கள் மாற்றத்தை விரும்பியமையும், புதிய வாக்காளர்களான இளைஞர்களும், யுவதிகளும் பொது ஜன ஐக்கிய முன்னணியை ஆதரித்தமையுமே ஐ தே க தோல்விக்கு காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்-

## அமைச்சு அறையிலிருந்த சொகுசு தளபாடங்களை அகற்ற சந்திரிகா உத்தரவு

(கொழும்பு)

கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சிலிருந்த அறையொன்றில் காணப்பட்ட சொகுசு தளபாடங்களை உடனடியாக அகற்றுமாறு பிரதமர் சந்திரிகாகுமாரணதுங்க உத்தரவிட்டுள்ளார்.

சாய்வுக்கதிரை, தொலைக்காட்சி, சொகுசுக் கட்டில், வீடியோ டெக் போன்ற பல பொருள்கள் அங்கிருந்தன. அமைச்சுக்கு நேற்றுமுன்தினம் விஜயம்செய்த சந்திரிகா குமாரணதுங்க அவற்றை கண்டவுடன் உடனடியாக அகற்றுமாறு உத்தரவிட்டார்.

# தேர்தலில் தோல்வியுற்றாலும் அதுவும் ஒரு சாதனையே

- எம். எஸ். செல்லச்சாமி

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே ஒரு தமிழன் இலங்கை வரலாற்றில் எம். எஸ் செல்லச்சாமி மட்டும் தான் இந்த செல்லச்சாமியைத் தவிர வேறு யாராலும் பாராளு மன்றத்திற்கு தெரிவு செய்யப்பட முடியாது என்பதையும், செல்லச்சாமி கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் வரை வேறு எவராலும் தலைநகர் தமிழர்களின் பிரதிநிதிகளாகதெரிவு செய்யப்படமுடியாது என்பதையும் நடந்து முடிந்த பொதுத்தேர்தல் உணர்த்தியுள்ளது. இவ்வாறு தேர்தல் முடிவுகள் தொடர்பாக இ. தொ. கா. வின் முன்னாள் பொதுச்செயலாளரும், முன்னாள் அமைச்சருமான எம். எஸ். செல்லச்சாமி விடுத்த அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அதில் மேலும் குறிப்பிடுகையில், இந்தத் தேர்தலில் தோல்வி ஒரு சோதனையாக அமைந்தாலும் அதுவும் ஒரு சாதனையே மக்கள் சேவைக்காக தன்னை முற்று முழுதாக அர்ப்பணித்த ஒருவனுக்கு வெற்றியும் தோல்வியும், இரவும் பகலும் போன்றதாகும்.

கவிழ்க்கப்பட இருந்த ஆட்சியை காப்பாற்றியவன் என்ற நன்றி உணர்வு சிறிதும் இல்லாமல் எனக்கு இழைக்கப்பட்ட அநீதியையும், இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் இருந்த அக்கறையின்மையையும், சாதாரண மக்களைப் பொருளாதார சுமைகளில் இருந்து மீட்டெடுக்க முடியாமையையும், அச்சம், பயம், பீதிகளால்நாட்டில் ஏற்பட்ட அமைதியின்மையும் பயங்கர படுகொலைகளையும் தினந்தோறும் தமிழ் இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் ஏற்பட்ட அவஸ்தைகளையும். பொதுசன ஐக்கிய முன்னணியில் இணைவதற்கான நம்பிக்கையையும், சரியான முறையில் மக்கள் முன்வைப்பதற்கும், தெளிவான வகையில் பிரசாரம் செய்வதற்கும் கால அவகாசம் இல்லாத காரணத்தினாலேதான் தலை நகரில் தமிழர் வாக்குகள் சிதறிப் போக காரணமாக இருந்துள்ளன.

அது மட்டுமல்ல எனது அமைப்பாளர்கள் பயமுறுத்தப்பட்டனர். அடித்து துன்புறுத்தப்பட்டனர். கூட்டம் போட்டால் வெள்ளைக் கொடியும், கறுப்புக் கொடியும் தான் பறக்கும் என்றனர்.

இத்தனை அச்சுறுத்தலுக்கும் மத்தியில் எனக்கு சுமார் பன்னிரண்டாயிரம் பேர் துணிந்து வாக்களித்துள்ளனர் இந்தப் பன்னிரண்டாயிரம் பேரும் ஐ. தே. கவிற்கு வாக்களித்து இருந்தால் ஐ தே. கவிற்கு இரு ஆசனங்களும், மேலும் ஒரு போனஸ் ஆசனமும் கிடைத்து இருக்கும். இதன் மூலம் ஐ. தே. கவே ஆட்சி அமைக்கும் நிலையும் ஏற்பட்டிருக்கும். இதனை உறுதியோடு இருந்து உடைத்து எறிந்த வாக்காளர்களுக்கு சிரம் தாழ்த்தி வணங்குகிறேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## ஆதாரம் காட்டிப் பெறவும்

(யாழ்ப்பாணம்)

செம்மணி வீதியில் திறப்புக் கோர்வை ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது, உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்

## பொ. ஐ. முவுக்கு உதவ தொண்டா தயாராம்

(கொழும்பு)

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு, புலிகள் இயக்கத் தலைவரை தூண்டுவதற்கு நான் யாழ்ப்பாணம் செல்ல முயற்சித்தமைக்கு, ஐ. தே. க. தலைமைப்பீடம் கைகொடுத்து உதவ தவறிவிட்டது. ஆகவே இப்போது இனப்பிரச்சனையை தீர்க்க எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு நான் ஆதரவளிப்பேன் என முன்னாள் அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்க இ தொ. கா. நிச்சயம் ஆதரவளிக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



### மேஜர் நெடுஞ்செழியன் / றம்போ
### (பாலசிங்கம் ரமணன்)

தாயின் மடியில்: 21 - 08 - 1975

தாயக மண்ணில்: 04 - 08 - 1994

எம் நேசத்திற்குரிய நண்பா! றம் போவே!
மணலாற்றுக் காட்டை குறுக்கும் நெடுக்கும்
காலால் அளந்து கணக்கை கச்சிதமாக சொன்னவனே!
நீ சென்ற திசை தேடுகிறோம்; காணவில்லை
வந்து விடு வாசலிலே ஓர் தடவை
உன் கால் இடறிய மர வேர்களும்
காற்றிலே உராய்ந்து கிறீச் ஒலி எழுப்பி - உன்
கவனத்தை திருப்பிய மரங்களும்
கறிகழுவிய ஆறும் - நீ
கால் நனைத்த மோட்டைகளும்
நீ சென்ற திசை தேடுகின்றனர், காணவில்லை
வந்து விடு வாசலிலே...... ஓர் தடவை
வெறும் மரணங்களால் எம்மை பிரித்து விட முடியாது
இறப்புக்குப் பின்னும் ஓர் உன்னத வாழ்வு
உன்னால் தான் வாழ முடியும் ஏனெனில்
உயர்ந்த கொள்கையை வரித்துக் கொண்டாய்
உன்னத தலைவனை ஏற்றுக் கொண்டாய்
மறவா!
இந்த வானும் இந்த மண்ணும் உள்ளவரை
உன் பெயர் வாழும் - ஏன்
உன் பெயர் சொல்லியே மணல் ஆறும் ஓடும்.

முல்லை மாவட்ட போராளிகள்

(9269)

# தமிழீழ நிர்வாக சேவை - தமிழீழம்

# வேலை வாய்ப்புக்கள்

தமிழீழ நிர்வாக சேவையின் பல்வேறு குடிசார் பொறியியல், (Civil Engineering) மற்றும் நிர்வாகப் பகுதிகளுக்குமான பின்வரும் பணி நிலைகளில் சேவையாற்ற விரும்புவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இருபத்தைந்து வயதுக்கு மேற்பட்ட, தேவைப்படும் தகைமைகளும், தேகாரோக்கியமும் உடையவர்கள் கீழ்வரும் மாதிரிப் படிவத்தை 21 cm × 29 cm தாளில் தமது சொந்தக் கையெழுத்தில் தயாரித்து 15-09-1994க்கு முன்பாக ''பொறுப்பாளர், தமிழீழ நிர்வாக சேவை'', கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும், வேதனம் பேசித் தீர்த்துக் கொள்ளப்படுவதுடன், ஊழியர் சேமலாபநிதி போன்ற பாதுகாப்பு ஒழுங்குகளும் ஏற்பாடு செய்து கொடுக்கப்படும். விண்ணப்பப் பத்திரங்களுடன் தகைமைச் சான்றிதழ்களின் நிழல்படப்பிரதிகளையும் இணைத்து அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் பத்திரங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் '.................பணி நிலைக்கான விண்ணப்பம்' என தெளிவாக குறிப்பிடப்படுவதனூடாக விண்ணப்பிக்கும் பணிநிலையினை வெளிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

**01.** சிரேஷ்ட பொறியியலாளர் (திட்டமிடுதல், வடிவமைத்தல், அமுலாக்கல்) பணிநிலை.

01: 1 பட்டயப் பொறியியலாளராக ஆகக்குறைந்தது பத்து வருடங்கள் கடமையாற்றிய அனுபவம்,

அல்லது

01: 2 பொறியியல் பட்டத்துடன் ஆகக்குறைந்தது பத்து வருடங்கள் தொடர்ச்சியாக தொழிலாற்றிய அனுபவம்,

அல்லது

01: 3 நிறைவேற்றுப் பொறியியலாளராகவோ அல்லது அதற்குச் சமமான கல்வித் தகைமையுடன் பொறியியலாளராக ஆகக் குறைந்தது 07 வருடங்கள் தொடர்ச்சியாக தொழில் புரிந்த அனுபவம் உடையவர்கள் இப்பணி நிலைக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவர்.

**02.** நிறைவேற்றுப் பொறியியலாளர் பணிநிலை:

02: 1 பட்டதாரிப் பொறியியலாளராக 05 வருடங்களுக்கு மேல்

அல்லது

02: 2 தொழில்நுட்பவியலாளர் தகுதித்தேர்வுப் பத்திரத் தகைமையுடன் ஆகக் குறைந்தது 10 வருடங்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றிய அனுபவம்.

அல்லது

02: 3 02:1, 02:2க்கு சமமான தகைமையும் அனுபவமும் உடையவர்கள் இப்பணி நிலைக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள்.

**03:** பொறியியலாளர் பணிநிலை

03: 1 பொறியியல் பட்டம் பெற்றவர்கள்

அல்லது,

03: 2 ஏதாவது ஒரு அரசநிறுவனத்தில் (பெருந்தெருக்கள் திணைக்களம்/வீதி அபிவிருத்திஅதிகாரசபைகள் போன்றவாறான நிறுவனங்கள்) தொழில்நுட்பவியலாளர் பதவியில் ஆகக் குறைந்த 05 வருடங்கள் தொடர்ச்சியாக பதவிபுரிந்த அனுபவமுடையவர்கள் இப்பணி நிலைக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவார்.

**04.** கணக்காளர் பணிநிலை

04: 1 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெறப்பட்ட வர்த்தகமானிப் பட்டம்/முகாமைத்துவமானி (வியாபார நிறுவாகம்) பட்டம்பெற்றவர்கள்.

அல்லது,

04: 2 அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் நிறுவனங்களில் பெறப்பட்ட கணக்கியல் தகைமைச் சான்றிதழுடன் ஆகக்குறைந்தது 03 வருடங்கள் வேலை அனுபவமுடையவர்கள்.

அல்லது,

04: 3 அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் கணக்கியல் டிப்ளோமா பயிற்சி நெறியில் திறமைச்சித்தியடைந்தவர்கள்.

அல்லது,

04: 4 கணக்குப் பதிவியல் நிறுவனத்தினது அல்லது கணக்கீட்டு தொழில் நிபுணத்துவ அமைப்பு ஒன்றினது இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள்.

அல்லது,

04: 5 இவற்றுக்குச் சமமான தகைமையுடையவர்கள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் கணக்காளர்/கணக்காய்வாளர் தரத்தில் ஆகக் குறைந்தது 08 வருடங்களாவது பணிபுரிந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**05.** சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பணிநிலை

05: 1 மொறட்டுவப் பல்கலைக்கழகத்தில் தேசிய தொழில் நுட்பவியல் தேர்வுத்

...களில் தமிழ்மொழி, கணிதம், வர்த்தகம் ஆகிய பாடங்களில் திறமை சித்தி பெற்றிருப்பதுடன் அரச தொழில்நுட்பக் கல்லூரியில் கணக்குப் பதிவியல் பயிற்சி நெறியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்,

அல்லது,

10:2 க. பொ. த உயர்தரப் பரீட்சையில் வர்த்தக நெறியியல் பயின்று கணக்கியலில் விசேட திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும்;

அல்லது,

10:3 ஏதாவது ஒரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் தொடர்ச்சியாக நான்கு ஆண்டுகளுக்குக் குறையாத தொழில் அநுபவத்தை உடையவர்கள்.

அல்லது,

10:4 மேற்காட்டிய தகைமைகளுக்குச் சமமான தகுதியுடையவர்கள் இப்பணி நிலைக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

**11:** தட்டெழுத்து/சுருக்கெழுத்தாளர் [தமிழ்] பணிநிலை.

11:1 க.பொ.த. சாதாரண பரீட்சையில் இருதடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ்மொழி, கணிதம், ஆங்கிலம், தட்டெழுத்து ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி உடையவர்கள்,

அல்லது

11:2 அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஆகக்குறைந்தது 10 வருடங்களுக்கு மேலான தட்டெழுத்தாளர் அனுபவம் உடையவர்கள் இப்பணிநிலைக்கு விண்ணப்பிக்கத்தகுதியுடையவர்களாவர்

**12:** உள்ளக கணக்காய்வாளர் பணிநிலை

12:1 அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வு நிறுவனம் ஒன்றில் கணக்காய்வாளராக ஆகக் குறைந்தது 05 வருடங்களுக்கு மேல் தொழில் அனுபவம் பெற்றவர்கள்,

அல்லது,

12:2 அரச/கூட்டுத்தாபன/தனியார்துறையில் உள்ளக கணக்காய்வாளராக 07 வருடங்கள் தொழில் புரிந்த அனுபவம் உடையவர்கள் இப்பணிநிலைக்கு விண்ணப்பிக்கத்தகுதியுடையவர்கள், (இது பற்றிய மேலதிக விபரங்களை பெறுவதாயின் மேற்படி விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.)

# தமிழீழ நிர்வாக சேவை : தமிழீழம்

..........: பணிநிலைக்கான

# விண்ணப்பப் படிவம்

| அலுவலக உபயோகம் |
|---|
| ........................ |
| ........................ |
| ........................ |
| ........................ |
| ........................ |
| ........................ |
| ........................ |

01. முதல் எழுத்துகளுடன் பெயர்:- ..........................

01: 1 முழுப் பெயர்:- ..........................

02: முகவரி:-

02: 1 நிரந்தர முகவரி:- ..........................

02: 2 தற்போதைய முகவரி:- ..........................

03: குடும்பவிபரம் :

03: 1 திருமணம் செய்தவரா? இல்லையா? :- ..........................

03: 2 திருமணம் செய்திருந்தால் விபரம் தருக:

| | பெயர் | உறவுமுறை | வயது | தொழில் |
|---|---|---|---|---|
| 1. | .................. | .................. | .................. | .................. |
| 2. | .................. | .................. | .................. | .................. |
| 3. | .................. | .................. | .................. | .................. |
| 4. | .................. | .................. | .................. | .................. |
| 5. | .................. | .................. | .................. | .................. |

04: 1 பிறந்த திகதியும், வயதும் :- ..........................

04: 2 15-09-1994 இல் வயது:-

| ஆண்டு | மாதம் | நாள் |
|---|---|---|
| | | |

**05:** கல்வித் தகைமை :-

05: 1 க. பொ. த (சா/த) :-

| ஆண்டு | பாடம் | தரம் |
|---|---|---|

05: 2 க. பொ. த (உ/த):-

| ஆண்டு | பாடம் | தரம் |
|---|---|---|

## விளையாட்டுப் போட்டி

(தொல்புரம்)

மூளாய் தெற்கு வாணி நிகேதன சனசமூக நிலையத்தின் பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நிலையத் தலைவர் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. மேற்படி நிகழ்வின் போது வலிமேற்கு பிரதேச செயலரும், விசேட ஆணையாளரும் மேலதிக அரசாங்க அதிபருமான திரு. கா. சந்திரராசா அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்; தொல்புரம் கிராமியப் பொறுப்பாளர் திரு சி. கீரன், மூளாய் கிராமசேவை அலுவலர் திரு நா, குமரகுருநாதன் உட்பட மற்றும் பல பிரமுகர்கள் வருகை தந்து நிகழ்வைச் சிறப்பித்தனர்

(41)

## காலபோக செய்கைக்கு பயிற்சி வகுப்பு

யாழ் மாவட்ட விவசாயிகளின் நன்மைகருதி அண்மையில் வடமராட்சி கெருடாவில் அம்பிகை பாலர் பாடசாலையில் காலபோக பயிர்ச்செய்கை பற்றிய பயிற்சி வகுப்பு ஒன்று நடாத்தப்பட்டது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் விவசாய போதனாசிரியர் பிரிவு ரீதியாக நடாத்தப்பட்டு வரும் விவசாயப் பயிற்சி வகுப்பின் தொடர் நிகழ்வாக நடாத்தப்பட்ட இப் பயிற்சி வகுப்பில் பயிர்களில் பீடை நோய் தாக்கம், விதை சேகரிப்பு, நிலக்கீழ் நீர் உவராதல், வீட்டுத் தோட்டப் போட்டி, பழ மரநாற்று மேடை, கிருமிநாசினி பாவனை என்பன பற்றி புலோலி விவசாய போதனாசிரியரால் விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

கெருடாவில் கிழக்கு கிராம சேவகர், கெருடாவில் தெற்கு கிராம சேவகர், தொண்டமனாறு தெற்கு கிராமசேவகர், புலோலி விவசாய போதனாசிரியர்கள் ஆகியோர் பங்குபற்றிய இப் பயிற்சி வகுப்பில் 50-ற்கு மேற்பட்ட விவசாயிகள் பயிற்சி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## பொருண்மியக் கலை அரங்கில் இன்று

நல்லூர் கண்காட்சியை முன்னிட்டு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால்

கின்றன.

### 05. சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பணிநிலை

05: 1 மொறட்டுவப் பல்கலைக்கழகத்தில் தேசிய தொழில் நுட்பவியல் தேர்வுத் தகைமையுடன் 08 வருட அனுபவம் பெற்றவர்கள்.

அல்லது

05: 2 தேசிய தொழில் பயிற்சி அதிகாரசபையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான 04 ஆண்டு கால முழுநேரப் பயிற்சியை முடித்தவர்கள் 08 வருட அனுபவம் பெற்றவர்கள்.

அல்லது,

05:3 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட கனிஷ்ட தொழில் நுட்பவியல் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் அல்லது இவற்றுக்குச் சமமான தகைமையுடையவர்கள்இப்பணிநிலைக்கு விண்ணப்பிக்க தகுதியுடைவர்களாவர்.

### 06: தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் 1 க்கான பணிநிலை

06:1 தேசிய தொழில் நுட்டவியல் தேர்வுப்பத்திரத் தகைமையுடன் ஆகக்குறைந்தது 03 வருடத் தொழில் அனுபவம் உடையவர்கள்,

அல்லது,

06:2 கனிஷ்ட தொழில்நுட்பவியல் பரீட்சை சான்றிதழ் தகைமையுடன் ஆகக்குறைந்தது 05 வருடத் தொழில் அனுபவம் உடையவர்கள்.

அல்லது.

06:3 தேசியத்தொழில் பயிற்சிச் சபையினது தொழில்நுட்பவியல் பயிற்சிச் சான்றிதழுடன் ஆகக்குறைந்தது 05 வருட தொழில் அனுபவம் பெற்றவர்கள் இப்பணிநிலைக்கு விண்ணப்பிப்பவர்கள் தகுதியுடையவர்களாவர்.

### 07: தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் 11 க்கான பணிநிலை

07:1 தேசிய தொழில்நுட்பவியல் தேர்வுப் பத்திரத் தகைமையுடையவர்கள்,

அல்லது,

07:2 தேசிய தொழில் பயிற்சிச்சபையில் பயிற்சிச் சான்றிதழ் பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தராக 03 வருடத்துக்கு குறையாத தொழில் அனுபவம் உடையவர்கள்

அல்லது,

07:3 தேசிய தொழில்நுட்பத் தராதரத் தகைமையுடன் ஆகக்குறைந்தது 03 வருடத்துக்கு குறையாத தொழில் அனுபவம் உடையவர்கள் இப்பணிநிலைக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

### 08: வேலை மேற்பார்வையாளர் பணிநிலை.

08:1 தேசிய தொழில்நுட்பவியல் தேர்வுப்பத்திரத் தகைமையுடையவர்கள்

அல்லது,

08;2 வீதி அபிவிருத்தி அதிகாரசபை/பெருந்தெருக்கள் திணைக்களம் அல்லது இவற்றுக்குச் சமமான அரச/தனியார் நிறுவனங்களில் வேலை மேற்பார்வையாளர் பணிநிலையில் ஆகக் குறைந்தது 06 வருட தொழில் அனுபவம் உடையவர்கள் இப்பணிநிலைக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

### 09: களஞ்சியக் காப்பாளர் பணிநிலை:

09:1 மூலப்பொருள் விநியோக. களஞ்சிய முகாமைத்துவம் போன்றவற்றைப் பேணும் அங்கீகரிக்கப்பட்ட. அரச/தனியார் நிறுவனம் ஒன்றில் களஞ்சியக் காப்பாளராக தொடர்ச்சியாக ஆகக் குறைந்தது05 வருட தொழில் அனுபவமுடையவர்கள்

அல்லது,

09:2 வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் அன்றி அதற்கு சமமான அரச/தனியார் நிறுவனம் ஒன்றில் களஞ்சியக் காப்பாளராக ஆகக்குறைந்தது 04 வருட தொழில் அனுபவம் உடையவர்கள் இப்பணிநிலைக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள்.

### 10: கணக்குப் பதிவாளர் பணிநிலை

10:1 க. பொ. த. சாதாரணப் பரீட்சையில் இருதடவைகளுக்கு மேற்படாத அமர்வு

### 05: கல்வித் தகைமை :-

05: 1 க. பொ. த (சா/த) :-

| ஆண்டு | பாடம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |

05: 2 க. பொ. த (உ/த):-

| ஆண்டு | பாடம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

06: 1 உயர் கல்வித் தகைமை:

| பல்கலைக்கழகம் / உயர்கல்வி நிறுவனம் | இருந்து | வரை | பாடநெறி (பாடத்துடன்) | பெறுபேறு |
|---|---|---|---|---|
| ........................ | ............... | ......... | .................... | ..................... |
| ........................ | ............... | ......... | .................... | ..................... |
| ........................ | ............... | ......... | .................... | ..................... |

06: 2 உயர் கல்வித் தகைமை பெற்ற திகதி:- ..............................................

07: தொழில் சார் தகைமை :

| நிறுவனம் | இருந்து | வரை | பாடநெறி (பாடத்துடன்) | பெறுபேறு |
|---|---|---|---|---|
| .............. | ........... | ............... | ................. | ........................ |
| .............. | ........... | ............... | ................. | ........................ |
| .............. | ........... | ............... | ................. | ........................ |

08: துறைசார் பிற தகைமைகள் / புலமைப்பரிசில்கள் / பதக்கங்கள், பரிசில்கள் பெற்றிருப்பின் அதன் விபரம்;

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

09; தற்போதைய தொழில் விபரம்:

09: 1 தொழில் / பதவி:- ............................................................

09: 2 நிறுவனம்:- ............................................................

09: 3 பணியில் இணைந்த திகதி:- ..................................................

09: 4 பணிபுரியும் அலுவலக முகவரி :- ..................................................
..................................................

09:5 தற்போது பெறும் வேதனம்:- ..................................................

10 : மண்மீட்புப் போரிலான நேரடி பங்களிப்பு (ஏதும் இருப்பின்)

..........................................................

..........................................................

..........................................................

11: வேறு விசேட குறிப்புகள்:-

..........................................................

..........................................................

..........................................................

மேற்கூறப்பட்ட விபரங்கள் யாவும் எனது அறிவு பூர்வமான வகையில்சரியானவை எனவும், மிகைப்படுத்தப்படாதவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

தமிழீழ நிர்வாக சேவையில் பணிபுரியும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்குமாயின் எனது சேவைக்காலத்தில் மனப்பூர்வமான எனது பங்களிப்பினை வழங்குவேன்எனவும் உறுதி கூறுகின்றேன்.

உண்மையுள்ள,

.............................. ..............................

ஒப்பம் திகதி (சி-10224)

நல்லூர் கண்காட்சியை முன்னிட்டு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் நடாத்தப்படும் கலை நிகழ்வுகளில் இன்று மாலை 05.30 மணிக்கு தமிழீழத்தினை தெரிந்து கொள்ளுங்கள் வினாவிடைப் போட்டியில் அரையிறுதி நிகழ்வு நடனம், கூத்து, பொம்மலாட்டம், வீடியோ, குறும் படங்கள் ஆகியன இடம் பெறும்.

### சுயதொழில் கடன்

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களை சுய தொழிலில் ஊக்குவித்து அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் நோக்குடன் உடுவில் மற்றும் கரவெட்டிப் பகுதி மக்களுக்கு அண்மையில் ஊக்குவிப்புக் கடன்கள் வழங்கப்பட்டன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால்உடுவில் வட்டத்தில் 3 ம் கட்டமாக 15 பயனாளிகளும் உடுப்பிட்டி பகுதியில் 18 பயனாளிகளும் தெரிவு செய்யப்பட்டு ஒரு பயனாளிக்கு 10,000 ரூபாவீதம் இக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

### பயிர்ச் செய்கைக் கடன்

முல்லை மாவட்டத்தில் 1994/95 ஆண்டு காலபோகத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்ள இருக்கும் 300 விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்கான நடவடிக்கையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

கிராமிய உற்பத்திக் குழுக்களூடாக வழங்கப்படும் இப்பயிர்ச்செய்கைக் கடன் வழங்கல் மூலம் விவசாயச்செய்கையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர்

## சிந்தனைக்கு..

நாடுகள் படைக்கப்படுவதில்லை- ஒட்டுப்போட்டு உருவாக்குவது இல்லை- பல நூற்றாண்டுகளாக படும் வேதனையின் வாயிலாக படிப்படியாக வளர்ந்து வலுப்பெறுபவை அவை-

- ஜான் மேஸ் பீல்ட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 03-09-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024

தபால் பெட்டி எண் 05

# முரண்பாடுகளை தவிர்த்து இருதரப்பு சந்திப்பு

பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா முப்படைகளின் உயர் அதிகாரிகள் மற்றும் பொலிஸ்மா அதிபருடன் நீண்டதொரு சந்திப்பை நேற்று முன்தினம் நடத்தியுள்ளார். இச்சந்திப்பு நான்கு மணித்தியாலத்திற்கு மேற்பட்டதாக இருந்ததெனவும் இநுகட்டமாக நடந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. முதல் கட்டத்தில் முப்படை உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய பிரதமர் சந்திரிகா பின்னர் வடக்கு-கிழக்கில் கடமை ஆற்றும் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதாகவும் அறிய முடிகின்றது.

பிரதமர் நடத்திய இச்சந்திப்பின் போது நடந்த பேச்சுவார்த்தை பற்றிய முழு விபரங்களும் வெளிவரவில்லை. ஆயினும் அங்கு நடந்த பேச்சுக்கள் மிகவும் சுமுகமான நல்லசூழ்நிலையில் நடைபெற்றதாகவே அறிய முடிகின்றது.

இவ்வாறு இருதரப்பினருக்கும் இடையிலான பேச்சுவார்த்தை சுமுகமான சூழ்நிலையில் நடந்ததினால் முரண்பாடுகள் முற்றாக நீங்கிவிட்டது எனக்கருதுதல் தவறாகலாம். இருதரப்பினரும் சர்ச்சைகளை கிளப்பக்கூடிய சூழ்நிலையைத் தவிர்த்துக் கொண்டமையும் இதற்குக் காரணமாக இருக்கலாம். ஏனெனில் அதற்கான தேவை இரு தரப்பினருக்கும் இன்று உண்டு.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்ற விடயத்தில் இராணுவத்தைப் பொறுத்து அபிப்பிராய பேதம் இல்லாமல் இல்லை. இநிலிருந்து எரிபொருள்களுக்கான தடை நீக்கம், யுத்த நிறுத்தம், தற்பொழுது நிலை கொண்டுள்ள பிரதேசங்களில் இருந்து பின்வாங்குதல் ஆகிய விடயங்களில் முரண்பாடு நிறையவே உண்டு.

ஆனால் பிரதமர் சந்திரிகாவுடனான முதல் சந்திப்பில் அதனை வெளிப்படுத்தி ஒரு முரண்பாட்டை வளர்க்க அவர்கள் விரும்பவில்லை என்பதே யதார்த்த நிலையாகும். ஏனெனில் அரசாங்கத்தின் கொள்கைகளுடன் முரண்பாடு கொண்டவர்கள் ஏற்கனவே வெளி

# தமிழீழத்தை தெரிந்து கொள்ளுங்கள்; அரைஇறுதிபோட்டிக்கு 41பேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உட்கட்டுமானப் பகுதியினரால் நல்லூரில் நடத்தப்பட்டுவரும் தமிழீழத்தினை தெரிந்து கொள்ளுங்கள் வினாவிடைப் போட்டியில் முதற் சுற்றுக்களில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரம் வருமாறு: இவர்கள் இன்று நடைபெறும் அரையிறுதிப் போட்டிகளில் கலந்துகொள்வர்.

சி. வசீகரன் (கோப்பாய்), ச. ரவிசங்கர் (யாழ்ப்பாணம்), செ. சேந்தன் (திருநெல்வேலி), இ. பேரின்பநாதன் (யாழ்ப்பாணம்), க. சுஜீவன் (சுந்தர்மடம்), இ. வைத்திலிங்கம் (சுழிபுரம்), செ. சபேசன் (கோப்பாய்), ம. பிரவீணன் (இணுவில்), இ. வாசுகிணன் (சுன்னாகம்), ஆ. சதீஸ் (கந்தர்மடம்), க. சேந்தன் (யாழ்ப்பாணம்), ஜெரிமயா வித்தியானி-யாழ்ப்பாணம், அ. அ. யூட் பிரணவன் - யாழ்ப்பாணம், சி. கமலன் - கொக்குவில், க. ஷாமினி - சுன்னாகம், யே. ஞானகரன் - சண்டிலிப்பாய், யோ. சிவராம் - கொக்குவில், தி. ஜெயந்தன்- சுன்னாகம், உ. ஜீவானந்தம்- ஆனைக்கோட்டை, பா. இளமயூரன் - இணுவில். தி. பாலமுருகன் - யாழ்ப்பாணம், கு. சுகுணன்- சுன்னாகம், து பிரஷாந்தன் - கொக்குவில், சி. சசிகரன் - கொக்குவில், ந. யெயகரன் - கந்தர்மடம், கெ. இந்திரமோகன் - கொக்குவில், ச. வெங்கடேசன் - சுன்னாகம், ப. சிபாந்நினி - சண்டிலிப்பாய், ஞா. அபிராமி - சங்கானை, இ. முரளிதரன் - ஆனைக்கோட்டை, யோ. திவாகர்- மானிப்பாய் ம. மனோரதி - யாழ்ப்பாணம், தி. குமரன் - நல்லூர், ச. பேசுபாலன் - சாவகச்சேரி, வி. கோகுலன் - சாவகச்சேரி, சி. விஜயகிரி- பளை, கு. இராகுலன் - கரவெட்டி, கு. பிரதீபன் - கொக்குவில், த. தனராசா-திருநெல்வேலி, பே. குமரதேவன் - திருநெல்வேலி, ஞா. பரதன் - வல்வெட்டித்துறை.

தேர்தல் வன்முறையில்

## பாதிக்கப்பட்ட ஐதே.க. ஆதரவாளருக்கு நட்டஈடு

(கொழும்பு)

தேர்தல் வன்முறைகளினால் பாதிப்பை அடைந்த ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் விசேட கொடுப்பனவுகளை வழங்குவதற்கான கமிட்டியொன்றை ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை செயலகத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சென்ற பொதுத்தேர்தலின் போது கட்சியின் வேலைகளின் போது நடந்த தாக்குதலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈட்டை வழங்குவதே இக் குழுவின் முக்கிய நோக்கமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எதிர்க்கட்சி உறுப்பினர்களின் வாகனங்களும் ஏலத்திற்கு வருமா?

- அரசுக்கு காமினி சவால்!

(கொழும்பு)

அமைச்சர்கள் மற்றும் ஆளும் கட்சி உறுப்பினர்களின் ஆடம்பரக் கார்கள் பகிரங்க ஏலத்தில் விற்க நடவடிக்கை எடுக்கப்படுவதைப்போல முன்னைய ஆட்சிக் காலத்தில் எதிர்க்கட்சியில் இருந்த உறுப்பினர்கள் சலுகைக் கட்டணத்தில் இறக்குமதி செய்த ஆடம்பரக் கார்கள் மற்றும் வாகனங்களும் பகிரங்க ஏலத்தில் விடப்படுவதற்கு பிரதமர் நடவடிக்கை எடுப்பாரா? இவ்வாறு ஐ. தே. கவைச் சேர்ந்த எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்கா கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், முந்திய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சலுகை விலையில் இறக்குமதி செய்த ஆடம்பரக்கார்கள் மற்றும் வாகனங்கள் எங்கே? அவற்றிற்கு என்ன நடந்தது? என்பது பற்றி விசாரணைகள் மேற்கொள்ளப்படுமா எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன் கடந்தபதினேழு ஆண்டுகளிலும் எதிர்க்கட்சியில் இருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் சலுகை கட்டணத்தில் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதியைப் பெற்று பின்னர் லாபத்துடன் விற்பனை செய்வதை ஒரு தொழிலாகவே நடத்தி வந்ததாகவும் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் புதிய அரசாங்கமொன்று பதவி ஏற்றதும் இத்தகைய கோமாளித்தனமான நடவடிக்கையில் ஈடுபடுவது வழக்கம் என்றும், 1965 லும் 1970 லும் இது போல நடந்துள்ளது எனவும் தெரிவித்தார். 1965 ல் பதவியேற்ற ஐ. தே. க. அரசு முந்திய சுதந்திரக் கட்சி காலத்து அமைச்சர்கள் பயன்படுத்திய பென்ஸ் ரகக் கார்களை 'லொத்தர்' பரிசுக்கு வழங்கப்பட்டதாகவும்

## கூ. தாபன தலைவர்களின் முந்தியசெயல்கள் ஆராய்வு

- சிரேஷ்ட அமைச்சர் தகவல்

(கொழும்பு)

பொது நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் தலைவர் பதவிகளிலிருந்த கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் அனைவரும் மாற்றப்படுவார்களா

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர் விண்ணப்பம் கோரல்

யாழ். கல்வி வலயம் இரண்டில் உள்ள எட்டுகோட்டங்களிலும் நிலவுகின்ற ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் கல்விக் கோட்டரீதியாக நியமிக்கப்படவுள்ளார்கள். இதற்கான நியமனங்களைச் செய்யும் பொருட்டு ஓய்வு பெற்ற அரசாங்க தனியார்துறை உத்தியோகத்தர்கள், ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், ஏனைய தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன-

இதற்கான விண்ணப்பங்கள் யாழ். கல்வி வலயம்-02 பணிப்பாளரினால் எதிர்வரும் 15-ம் திகதி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஏற்கனவே சேவையில்உள்ள பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களின் நியமனம் 1994 டிசம்பர் மாதத்துடன் முடிவடைவதால் அவர்கள் தொடர்ந்தும் சேவையாற்ற விரும்பின் இதற்கான விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும்.

தெரிவுகள் யாவும் எழுத்துப் பரீட்சை மூலமாகவும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் வாய்மொழிப் பரீட்சை மூலமாகவும் நடைபெறும்.

மேலதிக விபரங்கள் மாதிரி விண்ணப்பப்படிவம், பகுதி நேர ஆங்கில ஆசிரியர் தேவைப்படும் பாடசாலையின் பெயர்ப்பட்டியல்யாவும் கோட்டக்கல்வி அலுவலகங்களில் பார்வையிடலாம் என வலயம்-2 கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## நல்லெண்ண

இந்நிலையில், இன்றைய அரசு பொருளாதாரத் தடையைத் தளர்த்தியிருக்கிறது. இதனை எமது மக்கள் பெரிதும் வரவேற்பர் என்பது திண்ணம். எனினும், பொருளாதாரத் தடைகளை முழுமையாக அகற்றி, தமிழ் மாநிலத்தில் இயல்புநிலையை தோற்றுவிக்க காலகெதியில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென நம்புகிறோம். சிங்கள மக்களுக்கு எத்தகைய அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றனவோ அந்தப் பொருட்கள் அனைத்தையும் தமிழ் மக்களும் பெற்றுக்கொள்ள வாய்ப்பு அளிக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் உண்மையில் தமிழ் மக்களுக்கு நீதி வழங்கப்பட்டிருப்பதாக நாம் கருதுவோம்.

போர் நிறுத்தத்திற்கும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளுக்கும் நாம் தயார் என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம். சமாதானமும் இயல்புநிலையும் தோன்றுவதற்கு புதிய அரசாங்கம் மேற்கொள்ளும் சகல உருப்படியான முயற்சிகளுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்கவும் தயாராக இருக்கிறோம்.

## சப்பரத் திருவிழா

[கொழும்புத்துறை]

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் சப்பரத் திருவிழா இன்று மாலை 5.00 மணிக்கு நடைபெறும். (24)

## விசேட

கைதிகள் இன்று காலை எட்டு மணிக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளால் பருத்தித்துறைக்கு அழைத்துச் செல்லப்படுவர். அங்கிருந்து இவர்கள் சரக்குக் கப்பல் மூலம் பலாலியைச் சென்றடைவர்.

இவர்கள் காலை 10 மணியளவில் பலாலியில் இருந்து விசேட விமானம் மூலம் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட

கைதிகளாக

களா?

பதில்- அப்படிச் செய்வார்கள் என நினைக்கிறேன். அப்படியாக விடுவித்தால் நாம் நிச்சயம் வரவேற்போம்.

கேள்வி- நீங்களும் புலிகளைப் போல உங்களிடமுள்ள போராளிகளை விடுவிப்பீர்களா?

பதில்- இப்போது என்னால் பதிலளிக்க முடியாதுள்ளது. இது அரசாங்கத்தின் உயர்நிலையினரையும் சார்ந்தது.

கேள்வி- இராணுவ ரீதியான பேச்சுக்கள் உங்களுக்கும் புலிகளுக்குமிடையில் நடந்துள்ளதா?

பதில்- இதுவரை இல்லை.

கேள்வி- எதிர்காலத்தில்?

பதில்- என்னால் இப்போது பதிலளிக்க முடியாது, அது புலிகள் கொள்ளும் நிலைப்பாட்டைப் பொறுத்தது.

கேள்வி- அவர்கள் என்ன செய்யவேண்டும் என விரும்பு

பில் அதனை வெளிப்படுத்தி ஒரு முரண்பாட்டை வளர்க்க அவர்கள் விரும்பவில்லை என்பதே யதார்த்த நிலையாகும். ஏனெனில் அரசாங்கத்தின் கொள்கைகளுடன் முரண்பாடு கொண்டவர்கள் ஏற்கனவே வெளிவந்துள்ள 'இராணுவச்சதி' விவகாரத்தால் மிகவும் பலவீனப்பட்டுப் போயுள்ளனர். இந்நிலையில் அவர்கள் கிளப்பும் பிரச்சினைகள் எதையும் சந்தேகக் கண் கொண்டே பார்க்கப்படும், அது உண்மையும் கூட.

இந்நிலையில் இவர்கள் கூட புதிய அரசாங்கத்துடன் முரண்பாட்டை வெளிப்படுத்தாமல் ஒத்துழைப்பது போன்றதொரு சூழ்நிலையை வெளிக்காட்டிக் கொண்டார்கள் என்றே கூற வேண்டும். இந்நிலையிலேயே வடபகுதிக்கு எடுத்துச் செல்லத் தடை விதிக்கப்பட்ட மேலும் சில பொருள்களுக்கு தடை நீக்குமாறு அவர்கள் கோரும் நிலைவரை வந்தது.

இதேசமயம் சந்திரிகா குமாரணதுங்காவும் முதற் சந்திப்பிலேயே இராணுவத்துடன் முரண்பாடான கொள்கையைக் கடைப்பிடிக்க விரும்பவில்லை. ஏனெனில், இராணுவம் அரசியலில் பெற்றுவிட்ட முக்கியத்துவமும், இராணுவம் ஏற்கனவே மேற்கொள்ளத் திட்டமிட்ட இராணுவச் சதிப்புரட்சி பற்றிய தகவலும் தற்போதைக்கு அனுசரித்த போக்கை கடைப்பிடிக்கவே வைத்ததெனலாம்.

இந்நிலையிலேயே சந்திரிகா குமாரணதுங்கா யுத்த நிறுத்தம் பற்றிய பேச்சை பெரியளவில் எடுக்கவில்லை என்று கூறலாம்; மாறாக, இராணுவத் தரப்பினரைத் திருப்திப்படுத்தவும், அவர்களிடம் நன்மதிப்பைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியில் அவர் இறங்கி இருந்தமை கண்டுகொள்ளக் கூடியதாக இருந்தது.

இந்த வகையிலேயே பிரதமர் சந்திரிகா இராணுவத் தரப்பினருக்கு வழங்கிய உறுதி இருந்தது- இராணுவத்திற்குத் தெரியாமல் விடுதலைப்புலிகளுடன் இரகசிய உடன்பாடு எதையும் செய்து கொள்ளமாட்டோம் என உறுதி அளித்த பிரதமர் சந்திரிகா, அரசியல்தீர்வு குறித்த பேச்சு வார்த்தையின் முழு விபரங்களும் இராணுவத்தினருக்கும் தெரிவிக்கப்படும் என வாக்குறுதியும் அளித்தார். மேலும்இராணுவத்தினரின்குறைகள்தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதோடு வடபகுதி முகாம்களுக்கும் விஜயம் செய்யவும் விருப்பம் தெரிவித்தார்.

இந்த வகையில் பிரதமர் சந்திரிகா - முப்படை அதிகாரிகள் மத்தியில் இடம்பெற்ற சந்திப்பானது இருதரப்பும் பிரச்சினைக்குரியவற்றை கிளறாது, திட்டமிட்டு தவிர்த்துக் கொண்ட சந்திப்பு என்றே கூற முடியும். இதன் மூலம் இருதரப்பும் இராஜதந்திரமாக முதலாவது சந்திப்பை நிறைவு செய்துள்ளார்கள் என்று கூறலாமே ஒழிய முரண்பாட்டைத் தீர்த்துக் கொண்டார்கள் என்று கூறுவது தவறான கணிப்பாகவே அமையும்.

(கொழும்பு)

பொது நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் தலைவர் பதவிகளிலிருந்தவர்களின் கடந்தகால நடவடிக்கைகள் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசினால் மதிப்பீடு செய்யப்படுவதாகவும், அதன் அடிப்படையில் திருப்தி காணப்படுபவர்கள் தொடர்ந்தும் பதவியில் இருக்க அனுமதிக்கப்படுவார்கள் எனவும் ஏனையோர் பதவி துறக்கும்படி கோரப்படுவார்கள் எனவும் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் அனைவரும் மாற்றப்படுவார்களா என்று அமைச்சரிடம் வினவப்பட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், ஒவ்வொரு விடயமும் தனித்தனியே ஆராயப்படும், பொதுமக்களின் நலன்களை மனதில் கொண்டு செயற்படாதவர்கள் மட்டுமே பதவி துறக்கும்படி கோரப்படுவார்கள் எனவும் தெரிவித்தார்.

# பத்திரிகை விமர்சனங்களை புறக்கணிக்க வேண்டாம்

**- அமைச்சர் ஜயரட்ணா**

(கொழும்பு)

தவறுகளைத் திருத்திக் கொள்வதற்காக பத்திரிகையாளர்களின் விமர்சனங்கள் எமக்குத் தேவை அதனை நான் வரவேற்கிறேன் இவ்வாறு விவசாய காணி, வனவள அமைச்சர் டி, எம் ஜயரட்ணா தெரிவித்துள்ளார்

அமைச்சின் செயலாளர்கள் கூட்டுத்தாபன தலைவர்கள், மத்தியில் அண்மையில் உரையாற்றிய அவர் அங்கு மேலும் கூறுகையில், அமைச்சர் பதவியை ஒரு கட்சியினருக்கு மட்டும் சேவை செய்வதற்காக உபயோகிக்க மாட்டேன் இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் சேவையாற்ற நான் கடமைப்பட்டு இருக்கிறேன் எனது சேவை அனைவருக்கும் ஏற்றத் தாழ்வின்றியும் பாரபட்சம் இன்றியும் கிடைக்கும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் ஊழியர்கள் தாம் பெறும் வேதனத்திற்காக மட்டும் வேலை செய்யக் கூடாது அதேபோன்று கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்து பாய்ந்தோடும் எண்ணத்தோடும் வேலை செய்யக் கூடாது சேவை உணர்வுடன் வேலை செய்யும் ஊழியர்களையே நான் விரும்புகிறேன் சேவையின் போது அரசியலை அதற்குள் இழுத்துக் கொள்ளாதீர்கள் பத்திரிகைகள் சுட்டிக்காட்டும் விமர்சனங்களைப் புறக்கணிக்காதீர்கள் எனவும் கேட்டுக்கொண்டார்.

# ரிச்சார்ட் சொய்சா கொலை விசாரணைகள் நடத்தப்படும்

**-தர்மசிறி சேனநாயக்கா**

(கொழும்பு)

பத்திரிகையாளர் ரிச்சார்ட் டிசொய்சாவின் கொலைதொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாக, தகவல் தொடர்புஅமைச்சர் தர்மசிறி சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர்களின் நலன்கள் பாதுகாக்கப் படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

... அரசு முந்திய ... கட்சி காலத்து அமைச்சர்கள் பயன்படுத்திய பென்ஸ் ரகக் கார்களை 'லொத்தர்' பரிசுக்கு வழங்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

## ஐ.தே.க செயலாளரின் கிண்டல்

ஈ.பி.டி.பி. புதிய அரசைஆதரிப்பது, அவர்களது வாழ்வுப் போராட்டத்திற்கான விளையாட்டு என ஐ.தே.க பொதுச் செயலாளர் காமினி விஜேசேகர தெரிவித்துள்ளார்.

## கிணறுகளுக்கு குளோறின் இடப்பட்டது

வலிமேற்கு பிரதேச சபை அராலி உப அலுவலகப் பிரதேசப் பகுதியில் உள்ள மேற்படி சபைக்கு சொந்தமான குடி நீர் கிணறுகள் இறைத்து சுத்தமாக்கப்பட்டன. கடந்த வாரமளவில் இடம்பெற்றஇப் புனிதப் பணியை அராலி உப அலுவலக அதிகாரிகள், ஊழியர்கள், பொது மக்கள் இணைந்து மேற்கொண்டனர், சுத்தமான நன்னீரைமக்கள் பெறும் பொருட்டு அப்பகுதியிலுள்ள சபைக்கான கிணறுகள் அனைத்தும் இறைத்து சுத்தம் செய்யப்பட்டு குளோறின் மருந்தும் போடப்பட்டது. (41)

## கருத்தரங்கு

தொல்புரம் மத்திய சனசமூக நிலையமும், அதன் தோழமை ஸ்தாபனமாகிய தொல்புரம் மத்தி சர்வோதய கிராமோதய சமித்தியும் இணைந்து நடாத்தும் சிறுவர் கல்வி ஊக்குவிப்பு கருத்தரங்கு இன்று மாலை 5.30 மணியளவில் சனசமூக நிலைய முன்றலில் நிலையத் தலைவர் திரு. அ- சுகதேவன் தலைமையில் நடைபெறும் நிகழ்வின் இறுதியில் சிறுவர்களுக்கான கல்வி ஊக்குவிப்பின்பொருட்டு வீடியோ படக்காட்சியும் காண்பிக்கப்படும் (41)

செல்லப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்டுள்ள யுத்தக் கைதிகளான சிறிலங்கா பொலிசார் பலாலியில் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டதும் அவர்களை உடனடியாக கொழும்பிற்கு அனுப்பிவைப்பதற்கான சகல முயற்சிகளும் தம்மால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள்நேற்றிரவுதெரிவித்தன

பொருளாதார கூடிய வயதின் அடிப்படையில் தெரிவுசெய்தோம் இவர்களில் ஒருவர் மட்டும் சுகவீனம் காரணமாக விடுவிக்கப்படுகிறார்.

கேள்வி: ஏன் இவர்களை விடுவிக்க முற்பட்டீர்கள்?

பதில்: சமாதான பேச்சுவார்த்தைக்கான ஒரு நல்ல சமிக்கையைக் காட்டுவதற்காகவும் பொருளாதார தடையை சந்திரிகா அரசு நீக்கியதாலும் விடுவித்தோம்' அத்துடன் நாம் ஏற்கனவே கூறினோம் பொருளாதாரத் தடையை நீக்கினால் நாம் பொலிசாரை விடுதலை செய்வோம் என. அதன்படி இன்று இவர்களை விடுதலை செய்கிறோம்.

கேள்வி: எத்தனை பொலிசார் தங்கள் பாதுகாப்பில் உள்ளனர்?

பதில்: இன்னும் 19 சிறிலங்கா் பொலிசார் யுத்தக் கைதிகளாக எம்மிடம் உள்ளனர்

கேள்வி: இவர்களை எப்போது விடுதலை செய்வீர்கள்?

பதில்: சிறிலங்கா அரசு பொருளாதாரத் தடையை முற்றாக நீக்குமேயானால் நாம் ஏனைய 19 பேரையும் விடுவிப்போம்

இதேவேளை 21 சிறிலங்கா இராணுவத்தினர் யுத்தக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு விடுதலைப்புலிகளின் காவலில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது

... புலிகள் கொள்ளும் நிலைப்பாட்டைப் பொறுத்தது

கேள்வி- அவர்கள் என்ன செய்யவேண்டும் என விரும்புகிறீர்கள்?

பதில்- நிபந்தனையற்ற பேச்சுக்காக நேரடியாக வரவேண்டும்.

கேள்வி- இது நடைபெறும் என எதிர்பார்க்கிறீர்களா?

பதில்- நிச்சயமாக விரும்புகிறேன்.

நேற்று

புரம்,

- ★ யு அமரசிங்க (வயது 35) களுத்துறை,
- ★ ஈ எம். எஸ் செனரத்தினா (வயது35) கண்டி,
- ★ ஏ. டீ பிறேமதாசா (வயது 34) அம்பாந்தோட்டை,
- ★ கே. ஏ. ரஞ்சித் (வயது 34) களுத்துறை,
- ★ ஐ எம். தசநாயக்கா (வயது 30) கண்டி,
- ★ அனுரா விஜயபண்டாரா (வயது 25) பரும தகுசபணாம.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994. 09. 03**

**சனி இரவு**

08. 01 - அறிவியற் கலசம்
08. 10 - நிகழ்வும் பகிர்வும்
08. 25 - நேயர்கடிதங்கள்
08. 30 - செய்திகள்
08. 40 - சித்திரம் ''தென் தமிழ் ஈழவர் போல்எழுவோம்'

**1994. 09. 04**

**ஞாயிறு காலை**

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - களத்தில் மலர்ந்தவை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.

# கண்டியில் பிரதமர் சந்திரிகாவை கொலை செய்ய திட்டமிடப்பட்டதாம்

(கொழும்பு)
சிறிலங்கா பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவை கண்டியில் வைத்துகொலைசெய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும்இதனைத்தொடர்ந்து இவரின் 'பாதுகாப்பு பிரிவினர் எடுத்த மாற்று நடவடிக்கையினால் இம் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் பதவியை ஏற்று கண்டி தலதாமாளிகைக்கும் அஸ்கிரிய மல்வத்த பீடாதிபதிகளை சந்தித்து ஆசியைப் பெறும் நோக்குடன் கண்டிக்கு செல்ல திட்டமிட்டு இருந்தபோது இக் கொலை முயற்சியை திட்டமிட்டதாகவும் தகுந்தநடவடிக்கை உடனடியாக மேற்கொண்டமையினால் இத் திட்டம் முறியடிக்கப்பட்டது எனவும் கூறப்படுகின்றது.

இக் கொலை முயற்சி தொடர்பாக விசாரணை செய்ய சிரேஷ்ட குற்ற புலன் ஆய்வு பிரிவின் இருகுழுக்கள் தற்போது கண்டிக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் இவர்கள் ஒரு வாரத்தில் தமது பூரண அறிக்கையைசமர்ப்பிக்க உத்தரவிடப் பட்டுள்ளதாக இரகசிய பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி ஒருவர் 'லங்காதீப' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

## ஆஸ்பத்திரி பணிப்பாளர் அமைச்சரைச் சந்திப்பார்

(யாழ்ப்பாணம்)
யாழ் போதனா வைத்திய சாலைப்பணிப்பாளர் அடுத்த வாரம் கொழும்பில் கப்பல் போக்குவரத்துத் துறைமுகங்கள் புனர் வாழ்வு புனர் நிர்மாணஅமைச்சர் எம் எச் எம். அஷ்ரப்பை சந்திப்பார் எனத் தெரிவிக்கப் பட்டது.

போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் செல்வி கனகரத்தினம் நேற்று பிளம் பயன் கப்பலில் கொழும்பு பயணமானார்.

புதிய அமைச்சரவை பொறுப் பேற்றதை அடுத்து கொழும்பிற்கு அவர் பயணமாவது குறிப்பிடத்தக்கது.

யாழ். போதனா வைத்திய சாலைக்குரிய பொருள்களை கப்பல் ஊடாக அனுப்புவதில் உள்ள சிக்கல் சம்பந்தமாகவும் இச் சந்திப்பில் ஆராயப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பணிப்பாளர், கொழும்பில் உள்ள பல சுகாதார அதிகாரிகளையும் சந்திப்பார் என எதிர்பார்க்கப் படுகின்றது.

(தி பா)

## நரேமா வராமையால் பயணிகள் ஏமாற்றம்

(வடமராட்சி)
அறிவித்தபடி பருத்தித் துறை துறைமுகத்திற்கு நேற்று வருவதாக இருந்த 'நரேமா' பயணிகள் கப்பல் சேவை எந்தவித முன்னறிவித்தல்களும் இன்றி தடைப்பட்டதனால் பயணத்தைத் தொடர வந்த பயணிகள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

எதுவித அறிவிப்புகளுமின்றி இக் கப்பல் சேவை நேற்று தடைப்பட்டதனால் உடனடியாக கடமைக்குச் சமுகமளிக்க வேண்டியவர்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியவர்கள் வெளிநட்டுப் பயணத்தை தொடர வேண்டியவர்கள்,மற்றும்பலர் தமது முக்கிய கருமங்களை குறித்த திகதிகளில் செயற்படுத்த முடியாமல் போனதையிட்டு மனம் விரக்தியடைந்து காணப்பட்டனர்.

### சர்வதேச

திரு. அன்ரன் பாலசிங்கம் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் ஆகியோரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் சார்பில் யாழ் வதிவிடப் பிரதிநிதி செல்வி மேரி பேகின்ஸ் கைதிகள் நலன்பேணும் பிரதிநிதி திரு. சீவி பற்றிக் ஆகியோரும் கலந்து கொண்டனர்

மேலும் இவ் யுத்தக் கைதிகள் விடுவிப்பு நிகழ்வில் சர்வதேச செய்திஸ்தாபனமான 'ராய்ட்டர் செய்தியாளர்களும் உள்ளூர்ப் பத்திரிகையாளர்களும் கலந்து கொண்டனர்.

### யாழ்

வதாகத் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது. 7ஆம் திகதியிலிருந்து இது நடைமுறைக்கு வரும்எனத்தெரிவிக்கப்பட்டது

## கல்விக் கல்லூரி ஆரம்பம்

வவுனியா கல்விக்கல்லூரியின் 3-ம் தவணை எதிர் வரும் 5-ம் திகதி நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளது எனவும் நாளை மாலை 4 30 மணிக்கு கல்லூரியில் மாணவர்கள் சமுகமளிக்குமாறும் பீடாதிபதியால் வேண்டப் படுகின்றனர்.

## வீரச்சாவு



வீரவேங்கை
பரிமளன்

கடந்த புதனன்று திருகோணமலை பச்சைநூர் என்ற இடத்தில் விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை பரிமளன் (சிதம்பரம் விஜயகுமார், திருகோணமலை) எனும் போராளிக்கு விடுதலைப்புலிகள் வீரவணக்சம் செலுத்துகின்றனர்.

# தாண்டிக்குளம் இராணுவ முகாமில் 20 லொறிகள் திருப்பி அனுப்பப்பட்டன

வட பகுதிக்கு உணவுப் பொருட்களை ஏற்றி வந்த 20 லொறிகள் தாண்டிக்குளம் இராணுவ முகாமில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டதாக லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சிறிலங்காவின் தற்போதைய அரசாங்கம் சில பொருட்களுக்கு தடை நீக்கப்பட்ட போதும் அத் தடை நீக்கப்பட்ட உணவுப் பொருட்களுடன் நேற்று மூன்தினம் இவ் லொறிகள் வட பகுதியை நோக்கி சென்றதாகவும் இவையே இராணுவத்தினரால் திருப்பி அனுப்பியுள்ளதாகவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை இராணுவத்தின் இம் முயற்சி சமாதான முயற்சியை பாதிப்படையச் செய்யும் என்றும் எனவே இதற்கு உடனடியாக ஆவன செய்யவேண்டும்எனவும் அரசியல் அவதானிகள் கருதுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழருடன் புதிய புரிந்துணர்வு அடிப்படையில் பணிபுரிவோம்

## விடுவிக்கப்பட்ட கருணாநாயக்கா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
புலிகளின் காவலிலிருந்து நாங்கள் விடுதலை செய்யப்பட்டு, சொந்த இடங்களுக்கு திரும்பும் பட்சத்தில், மீண்டும் பொலிஸ் சேவையில் இணைய வேண்டிய கடப்பாடு உண்டு. அவ்வாறான நிலையில், தமிழ் மக்களோடு புதிய புரிந்துணர்வோடு நிச்சயம் நடந்துகொள்வோம், என விடுதலைப் புலிகளின் காவலிலிருந்து விடுதலையாகும் யுத்தக் கைதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நிக்கவரெட்டியாவைச் சேர்ந்த கருணாநாயக்கா எனும் கைதியே இவ்வாறு எமது நிருபருக்கு தெரிவித்தார். கடந்த 50 மாதங்களாக, தடுத்துவைக்கப்பட்டிருந்தும், சிறிலங்கா அரசு, ஆக்கபூர்வமான முயற்சிகளை உளப்பூர்வமாக எடுக்காதிருந்தது. நாங்கள் புலிகளால் சித்திரவதை செய்யப்படுகிறோம் என தவறான பிரசாரங்களை மேற்கொண்டது எம்மைப் பற்றிக் கவலைப்படாமல், தமது இலாபத்தையே குறியாகக் கொண்டது சிறிலங்கா அரசு.

இங்கிருந்து விடுதலை செய்யப்பட்டு செல்லும் நாம், இதுவரை விடுதலையாகி செல்பவர்கள் சொல்லிச் செல்வது போல், மீண்டும் பொலிசில் இணையமாட்டோம் என பொய்கூற விரும்பவில்லை. வேறு நல்ல வேலை கிடைக்கும் பட்சத்தில், பொலிஸ் வேலையை விட்டுவிட தயாராயுள்ளோம் எனவும் இவர் தெரிவித்தார்.

பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவையும் சந்தித்து, யாழ். நிலைவரம் குறித்து எடுத்துக் கூறப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

# யாழ். மாவட்ட நிலை குறித்து சந்திரிகாவிற்கு அறிக்கை

## அரச அதிபர் எடுத்துச் சென்றார்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகளை விளக்கும் நீண்ட அறிக்கையுடன் கொழும்பிற்குப் புறப்பட்டுச் சென்ற யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இதன் பிரதிகளை பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவிடமும், ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிடமும் சமர்ப்பிக்கவுள்ளார்.

இவர் பொதுஜன ஐக்கிய முன்னணியின் புதிய அரசாங்கத்தின் ஏனைய அமைச்சர்களையும், அதிகாரிகளையும் சந்தித்து யாழ். மாவட்டத்தின் நிலைமைகளை நேரில் விளக்கவுள்ளார்.

பிளம்பயன்கப்பலில் நேற்று முன்தினம் கொழும்பு புறப்பட்டுச் சென்ற அரச அதிபர் தமது விசேட அறிக்கை ஒன்றை எடுத்துச் சென்றுள்ளார்.

இந்த மாவட்டத்திற்குத் தேவையான பொருள்களுக்கு குறைவாகவே அரசினால் பொருள்கள் அனுப்பி வைக்கப்படும் நடவடிக்கை பற்றியும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இடம் பெயர்ந்தமக்கள் மீளக்குடியேறமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதும், கிளாலி தவிர்ந்த வேறு பாதையால் பயணம் மேற்கொள்ள முடியாத நிலையும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன

புதிய பிரதமருக்கு யாழ். மாவட்டத்தின் நிலைமையை தெளிவாகவிளக்குவதே எமது நோக்கம் என இந்த அறிக்கை பற்றி செயலக அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

(தி), (பா)


யாழ். ஸ்ரீதர் அகல வெண்திரையில்...
தினசரி காலை 10.30 மணிக்கு
WAY OF THE DRAGON
[கராட்டி]
தினசரி மாலை 4-00, 6-00 மணிக்கு
CIRCUS
உதைபந்தாட்ட ரசிகர்களுக்காக
சனி, ஞாயிறு பி ப. 2 15 மணிக்கு
SOCCER WORLD CUP - 1994
BRAZIL VS ITALY - FINAL
உலகக்கிண்ண உதைபந்தாட்டம் - 1994
பிறேசில் எதிர் - இத்தாலி - இறுதி ஆட்டம்
(சி-10230)

யாழ். வணிகர் கழகம் விடுக்கும்
முக்கிய அறிவித்தல்

நல்லூர் தீர்த்த உற்சவத்தை முன்னிட்டு எதிர் வரும் 05-09-94 திங்கட்கிழமை யாழ். வணிகர் கழக எல்லைக்குட்பட்ட அனைத்து வணிக நிலையங்களும் முழுமையாக பூட்டப்பட்டிருக்கும் என்பதை அறிவித்துக்கொள்கிறோம்.

90-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்





லெப்ரினன்ட் அன்பழகன் (அன்ரன்) லெப்ரினன்ட் ஒப்பிலான் (R P G.சுதன்)

(தம்பிப்பிள்ளை அகிலநாதன்) (சேனாதிராசா நாகேந்திரராசா)

பிறப்பு
29 - 02 - 1972

- வீரச்சாவு -
06 - 06 - 1994

பிறப்பு
31 - 03 - 1973

06 06-1994 இல் மாதகல் சில்லாலைப் பகுதியில் பதுங்கியிருந்து தாக்கிய சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவடைந்தனர்.

03-09-94 இல் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் பங்கு பெறுமாறு போராளிகளையும், உறவினர், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்

கொத்தியாலத்தை,
சுண்ணாகம்

''இராஜபவனம்''
சண்டிலிப்பாய் வடக்கு.

(9274)

ளார்.

அந்த அறிக்கையில், இடம் பெயர்ந்த மக்களின் நிலைமை, அவர்களின் நிவாரணக் கொடுப்பனவு ஆகியவையும், யாழ்-மாவட்டத்தில் 1990 நடுப் பகுதிக்குப் பின்னர் இராணுவ நடவடிக்கை காரணமாக தொழிலை இழந்து தவிக்கும் தொழிலாளர்கள், மீன்பிடித் தொழிலாளர்கள் மற்றும் தொழில் நுட்பவிபலாளர்கள் ஆகியோரின் அவல நிலைமைகளும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

நிவாரண உணவுப் பொருள்கள் தவிர்ந்த ஏனைய பொருள்கள் கப்பலில் எடுத்து வருவதற்கு அரசாங்கம் விதித்துள்ள கப்பல் கட்டணத்தால் யாழ் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள விலையுயர்வும்

## ஜனாதிபதிவேட்பாளர் காமினி?

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக எதிர்க்கட்சித்தலைவர்காமினி திசாநாயக்கா போட்டியிட முயற்சிப்பதாககட்சியின் உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக ஏ. எப். பி. செய்திகள் தெரிவிக்கின்றன

தற்போது எதிர்க் கட்சித் தலைவராகவும் கட்சியின் பிரதி தலைவராகவும் இருக்கும் காமினிதிசாநாயக்கா தற்போது ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக கட்சியின் ஏனைய உறுப்பினர்களிடம் ஆதரவைத் திரட்டும் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாக அக்கட்சி வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன

மிக விரைவில் கட்சியின் பொதுக் கூட்டத்தில் காமினி திசாநாயக்காவின் பெயரைப் பிரேரிப்பதற்கு பல உறுப்பினர்கள் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாக அச்செய்திகள் மேலும் தெரிவித்துள்ளன

பொதுச் செயலாளர்
- யாழ். வணிகர் கழகம்

(சி-10241)

## மரண அறிவித்தல்

### மாரிமுத்து சிவகுரு

புங்குடுதீவு மேற்கு 4-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இல. 57, கச்சேரி கிழக்கில் வசித்தவருமான மாரிமுத்து சிவகுரு 2-9-94-ல் காலமானார். அன்னார் காலம் சென்ற மாரிமுத்து தெய்வானையின் அன்பு மகனும், பரிமளத்தின் அன்புக் கணவரும், காலம்சென்ற சண்முகம் மீனாட்சியின் அன்பு மருமகனும், பகவதி, பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), முருகானந்தன், சிவானந்தன் (சுவிஸ்), நித்தியானந்தன் (சுவிஸ்), திலகவதி, செல்வானந்தன் (சுவிஸ்), ஜெயவதி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் உதயகுமார் (சுவிஸ்), சிவகாமி (ஜேர்மனி), இந்திராணி, புவனேஸ்வரி (கொழும்பு), சுசிகலா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவதர்சினி, பிரசன்னா, மயூறதன், றமிலன், மஞ்சுளா, மிசிந்தன், சிந்துஜா, அனுசாந் ஆகியோரின் அன்புப் பேரனும் லெட்சுமி, நாகம்மா, நல்லம்மா, பாக்கியலெட்சுமி, சின்னம்மா ஆகியோரின் அருமைச்சகோதரரும், தம்பிப்பிள்ளை, காலம்சென்ற வள்ளிப்பிள்ளை நாகலிங்கம், காலம் சென்ற இராசையா, சின்னத்துரை, அருளம்பலம், காலம்சென்ற ஆறுமுகம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 3-9-94 இன்று பத்து மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
- குடும்பத்தினர்

57, கச்சேரி கிழக்கு (9267)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ம் ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது